விலை ரூபா: 20.00

# தமிழ் நாதம்

Thamil Naatham

ாகம் 01 | தாளம் 97

வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 16 வியாழக்கிழமை (01.11.2012)

பக்கங்கள்: பதினாறு

டெங்கு ஒழிப்புப் பணியில்

அணி திரள்வோம்

## அழுத்தங்களுக்கு அடிபணியாது

## ந்தேகநபரை ஆஜர்படுத்தவும்

### கல்கிஸ்ஸை நீதவான்

(கொழும்பு)

ச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ் திலகரட்ன மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவ பாரதூரமானதாகும். ஆதலால் அழுத்தங்க அடிபணியாது சந்தேக நபரை நீதிமன்றத் டிய விரைவில் ஆஜர்படுத்துமாறு கல்கிஸ்ஸ நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ் திலகரட்ன மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்ப தொடர்பான வழக்கு கல்கிஸை பிரதான நீத வான் நிரோஷா பெர்னாண்டோ முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதவான் பொலிஸாருக்கு மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கு விசாரணையின்போது கல்கிஸை சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அத்துல்ல ரணகல்ல, பொலிஸார், நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்னவின் வாழ்க்கை தொடர்பில்

02



வன்னியை ஆண்ட கடைசி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவு தினம் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

## 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படக்கூடாது

# கிழக்கு மாகாண சபைக்கு பிரேரணை வருகின்றது

(மட்டக்களப்பு)

சிறுபான்மை மக்களுக்கான தீர்வின் முதல்படியான 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாகக் கைவிடப்பட்டாக வேண்டும் என்ற அடிப்படையில் கிழக்கு மாகாண சபையில் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளேன் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்திருக்கிறார்.

13ஆவது திருத்தச்சட்டத்தினை நீக்குவது தொடர்பான விசேட பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டுவருவதற்கும், அச்சட்டத்தை நீக்குவதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் இரு அமைச்சர்கள் தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும் வரையில், 13வது திருத்தச்சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டும் என்ற பிரேரணையை கிழக்கு மாகாண சபையில் முன்வைக்கத்

02

## வாரங்களில் ட்டுப்புள்ளிகள் ளியாகும்

(கொழும்பு)

கலைக்கழகங்களுக்கு விண்ப்பதற்கான வெட்டுப்புள்ளி இன்னும் இரு வாரங்களுக் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சு அதிகாரி அறிவித்துள்ளனர்.

ய பெறுபேறுகள் ஏற்க வெளியிடப்பட்ட நிலையில் லைக்கழக மானியங்கள் க்குழு, உளச்சார்பு பரீட் பெறுபேறுகளை தற்போது யிட்டுள்ளது.

நிலையில், காலதாமதமின்றி வாக வெட்டுப்புள்ளிகள் பிடப்படும் என்று மேற்படி சு குறிப்பிட்டுள்ளது.

## கையில் ஆபாச இணைய கள் தடை செய்யப்படுமா?

(கொழும்பு)

கை இளைஞர், யுவதிகள் தோன் அடையாளம் காணப்பட்ட ஆபாச யத்தளங்களை முடக்குவது எதிர்வரும் 14ஆம் திகதி இறுதி அறிவிக்கப்படவுள்ளது.

இணையத்தளங்களை தடை குறித்த வழக்கு நேற்று (31) முல்லை விசேட சிறுவர் றில் இடம்பெற்றது. குறித்த

02

## மாகாண சபை அதிகாரத்தை எதிர்த்து தாதியர்கள் நாடெங்கும் பகிஷ்கரிப்பு

### யாழ்ப்பாணத்திலும் தாதியர் பணிப் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

தாதியர் நியமன அதிகாரத்தை மாகாணசபைக்கு வழங்குவதாக சுகாதார அமைச்சு அண்மையில் அறிவித்ததன் பின்னணியில் கிளம்பிய எதிர்ப்பினையடுத்து மருத்துவமனைகளில் பணியாற்றும் தாதியர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு மத்திய அரசாங்கம் எடுத்துள்ள முடிவை இரத்துச் செய்யுமாறு வலியுறுத்தும் அமைதி ஆர்ப்பாட்டங்கள் நாட்டின் பலபகுதிகளிலும் நடத்தப்பட்டுள்ளன.

02

## வியட்நாம் கப்பல் இலங்கை புயலில் சிக்கி கடலில் மூழ்கியது

(கொழும்பு)

நீலம் புயலில் சிக்கிய வியட்நாமிய சரக்குக் கப்பல் ஒன்று இலங்கை கடற்பரப்பில் மூழ்கியுள்ளது. இதில் பயணம் செய்த கப்பலின் தலைவன் உள்ளிட்ட 4 மாலுமிகள் காணாமற்போயுள்ளனர்.

மியான்மாரில் இருந்து இந்தியாவுக்கு 6500 தொன் மரம் ஏற்றிச்சென்ற சாய்கோன் குயீன் என்ற சரக்குக் கப்பலே இலங்கை கடற்பரப்பில் மூழ்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 12.15 மணியளவில், இலங்கை கடற்பரப்பில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, ஆபத்தில் சிக்கியுள்ளதாக இந்தக் கப்பலில் இருந்து

02

## வி ஒளி ளை ளிவரும்

தவிர்க்க முடியாத ணங்களினால் நேற்று கிழமை) கல்வி ஒளி யாகவில்லை. நாளை திகதி (வெள்ளிக்கி ) வெளிவரும் என்ப தெரிவித்துக் கொள் ம். (ஆ-ர்)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு எதிராக வழக்கு தொடுக்க பொதுமகன் தயாராகிறார்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அதிகாரசபைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக திம்பிரிகஸ்சாய பிரதேசத்தைச் சேர்ந்த சரத் சுபசிங்க என்ற பொதுமகன் ஒருவர் அறிவித்துள்ளார். தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு தரம் குறைந்த கார்பட் போடப்பட்டுள்ளதால் அந்நெடுஞ்சாலையினூடான பயணத்தின் போது ஏற்படும் விபத்துக்களைத் தவிர்க்க முடியாதுள்ளது எனக் கூறியே தான் இந்த வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

02

## இலங்கைத் தமிழர் தற்கொலை முயற்சி: நாடு கடத்தல் உத்தரவுக்கு நீதிமன்றம் தடை

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் இருந்து நேற்று நாடுகடத்தப்படவிருந்த இலங்கை தமிழர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவரை நாடு கடத்தக்கூடாது என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இறுதிநேர சட்ட நடவடிக்கைகளும் தோல்வியில் முடிவடைந்தன.

இதனையடுத்து 42 வயதான குறித்த இலங்கை தமிழர் அவுஸ்திரேலியாவில் இருந்து நேற்று பிற்பகல் 3 மணிக்கு நாடுகடத்தப்படவிருந்தார். இந்தநிலையில் அதிகாலை 5 மணியளவில் அவர் தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

தற்கொலை முயற்சியை அடுத்து

02

# பண்டார வன்னியன் நினைவு தினத்தில் கூட்டமைப்பு பதாகை

வன்னியை ஆண்ட கடைசி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவு தினம் நேற்று புதன் கிழமை நினைவு தினம் மக்களின் வெளிநடப்புக்கு மத்தியியல் இடம்பெற்றது.

அனைத்து இன, மத மக்களையும் ஒன்றுதிரட்டி அரசியல் கலப்பின்றி வவுனியா நகரசபையும் பண்டாரவன்னியன் அறங்காவற் குழுவும் பண்டாரவன்னியன் நினைவு தினத்தினை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து நிகழ்வுகளை நடத்தியபோது வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் வருகை தந்த சிலர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் இவ் விழா இடம்பெறவேண்டுமெனவும் அது தொடர்பாக தாம் கொண்டு வந்திருந்த பதாதையை இட வேண்டுமெனவும் ஏற்பாட்டாளர்களுடன் முரண்பட்டனர்.

எனினும் பண்டாரவன்னியன் அறங்காவல்குழு அவ்வாறு பதாதை அமைக்கப்பட்டால் அரசியல் மயப்படுத்தப்பட்டுவிடும் எனவே அதனை தவிர்க்குமாறும் அவ்வாறு அமைத்தால், தாம் வெளியேறுவதாகவும் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்திருந்தனர்.

எனினும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பதாதை அமைக்கப்பட்டதை அடுத்து அறங்காவல் குழுவும் சில பொது மககளும் தாம் அரசியல் கலப்புள்ள நிகழ்வில் பங்கேற்க மாட்டோம் என தெரிவித்து வெளியேறிவிட்டனர்.

# புத்தளத்தில் காணாமல் போன ஐந்து மீனவர்கள் முல்லைத்தீவில் மீட்கப்பட்டனர்

கடலில் மீன்பிடிக்கச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்த ஐந்து மீனவர்களை முல்லைத் தீவு, நாயாறு பிரதேசத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை இரவு, இராணுவத்தினர் காப்பாற்றியுள்ளனர்.

நீர்கொழும்பு மீன்பிடித் துறை முகத்திலிருந்து ஆழ்கடல் மீன் பிடிக்காகச் சென்ற நிலையிலேயே இவர்கள் காணாமல் போயிருந்தனர்.

மீன்பிடிப் படகில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இவர்கள் கரைசேர்ந்ததாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் ஐவரும் காரைதீவு மற்றும் புத்தளம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரியவந்துள்ளது. இவர்கள் தொடர்பான விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தெற்கு அதிவேக...(தொடர்)

மேற்படி நபருடைய கார், கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெடுஞ்சாலையில் வைத்து விபத்துக்கு உள்ளாகியதாகவும் விபத்துக்குள்ளான காரை திருத்துவதற்காக தான் ஒன்றரை இலட்சம் ரூபாவை செலவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த நெடுஞ்சாலையில் இடத்துக்கிடம் நீர் தேங்கி நிற்பதோடு சில இடங்களில் போடப்பட்டுள்ளதாரி, குவியலாகவும் காணப்படுகிறது. இந்த நெடுஞ்சாலைக்கு இடப்பட்டுள்ள கார்பட் மிகவும் தரம் குறைந்ததாகவே காணப்படுகின்றது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலை அதிகாரசபையின் தலைவர் மற்றும் முகாமையாளர், "இந்த நெடுஞ்சாலை ஜப்பான் தொழில்நுட்பத்திலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அதனால் உரிய தரத்துடன் இவ்வீதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அதனால், குறித்த நபரான சரத் சுபசிங்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது" என்றார்.

## வேலணை மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா

வேலணை மத்திய கல்லூரி ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று கல்லூரியினது சேர் வைத்திலிங்கம் துரைசாமி ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட விரிவுரையாளர் சி. பேரின் பநாதனும் சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலையத்தின் இளைப்பாறிய வி.ராதா கிருஸ்ணனும், தீவக வலயப் பணிப்பாளரும் கலந்து கொள்வார்.

## இலங்கையில்...(தொடர்)

இணையத்தளங்கள் தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைக்கவில்லை என நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இளைஞர், யுவதிகள் தோன்றும் 51 ஆபாச இணையங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பொலிஸ் விசாரணை பிரிவு தெரிவித்தது. மாணவர்களும் இத்தகைய இணையத்தளங்களில் காணப்படுவது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையிலேயே இந்த இணையங்களைத் தடை செய்யுமாறு பொலிஸ் விசாரணைப் பிரிவு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைத் தமிழர்...(தொடர்)

ரோயல் மெல்போன் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்ட அவர் சிகிச்சைக்கு பின்னர் மீண்டும் மாரிபிநோங் தடுப்புச் சிறைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரி வரும் தமிழர்களுக்காக குரல் கொடுத்துவரும் கரன் மயில்வாகனம் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், நேற்று அதிகாலை 5.15 மணியளவில் முகாமில் ஒருவர் தற்கொலைக்கு முயன்றுள்ளதாக தொலைபேசியில் அழைத்தவர் தன்னை உஷார் படுத்தியதாகவும் தெரிவித்தார்.

இந்தநிலையில் குறிப்பிட்ட நபரை நாடு கடத்த வேண்டாம் எனக் கோரி அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாமுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

கரன் மயில்வாகனமும் இந்த ஆர்ப்பாட்டத்தில் காணப்பட்டார். இதன் பின்னர் த ஒஸ்திரேலியா ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

"இன்று (31) மாலை மெல்பேர்னில் இருந்து நாடுகடத்தப்படவிருந்த நிலை யில், அவர் இன்று காலை இந்த தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். எனினும் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு காப்பாற்றப்பட் டிருந்தார். இந்த நிலையில் நேற்றைய தினம் அவர் தமது நாடுகடத் தலுக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்பட்டுள்ளது."

அதன் படி, இலங்கையில் அவருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக கூறப்படும் நிலையில், அவரை நாடுகடத்த கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வியட்நாம் கப்பல்...(தொடர்)

உதவி கோரி அழைப்பு விடுக்கப்பட்டது. பின்னர் நீலம் புயலில் சிக்கியதால், இந்தக் கப்பலுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டது.

இதையடுத்து இலங்கை, அமெரிக்க கடைலோரக் காவல்படை மற்றும் கப்பல்களின் உதவியுடன் தேடுதல் நடத்தப்பட்டது. நேற்றிரவு முன்தினம் 9.20 மணியளவில், கிரேக்க கப்பல் ஒன்று 3 மாலுமிகளை மீட்டது.

மற்றொரு மிதவைப்படகில் இருந்து 16 மாலுமிகள் மீட்கப்பட்டுள்ளனர்.

மூன்று மாலுமிகள் இன்ன மும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## அழுத்தங்களுக்கு...(தொடர்)

ஆராய்ந்துகொண்டிருக்கின்றனரே தவிர, குற்றவாளியைக் கைது செய்யும் வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

சட்டதரணியின் குற்றச்சாட்டை மறுதலித்த பொலிஸார் 'அவரது தொலைபேசிக்கு வந்த அழைப்புகள் தொடர்பான விசாரணை முறையாக முன்னெடுக்கப்படுகின்றது. தாக்குதல் நடத்துவதற்காக சந்தேக நபர்கள் வருகை தந்ததாகக் கூறப்படும் வாகனம் தொடர்பில் கிடைத்த தகவல்களை வைத்துக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

தனது நீதிமன்ற அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவமானது பாரதூரமான சம்பவமாகும் என்றும் சுட்டிக் காட்டிய பிரதான நீதிவான் வழக்கு விசாரணையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## கிழக்கு மாகாண சபைக்கு...(தொடர்)

திட்டமிட்டுள்ளதாக தெரிவித்து, அவரசமாக நேற்று புதன்கிழமை விடுத்துள்ள அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வு வழங்கக் கூடாது என விரும்புகின்ற இரண்டு அமைச்சர்களால் இவ்வாறு பாராளுமன்றத்தில் விசேட பிரேரணை ஒன்று கொண்டு வரவுள்ள நிலையில் இதற்கு சிறுபான்மையினரின் உரிமைகளை ஏற்றுக் கொண்ட யாரும் ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

13வது திருத்தச் சட்டமானது சிறுபான்மை மக்களுக்கான தீர்வின் முதல் படியாகும். இதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாகக் கைவிடப்பட்டாக வேண்டும் என்ற அடிப்படையில் கிழக்கு மாகாண சபையில் பிரேரணையைக் கொண்டு வரவுள்ளேன்.

அதேநேரம், தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வுத்திட்டம் கொண்டு வரப்படும் வரையில் பல்வேறு இழப்புகளுக்கு மத்தியில் உருவாக்கப்பட்ட தற்போது சிறிதளவேனும் நடைமுறையிலுள்ள இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு ஓரளவுக்கான நம்பிக்கைகளைக் கொடுத்துள்ள 13வது திருத்தச்சட்டம் நீக்கப்படுவதனை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு கொஞ்சமேனும் அதிகாரம், உரிமைகள் வழங்கப்பட்டு விடக்கூடாது என்பதில் தொடர்ச்சியாகவும் விடாப்பிடியாகவும் முயற்சிகளை மேற்கொண்டுவரும் பெரும்பான்மைச் சிந்தனையுடன் செயற்படும் மேலாதிக்கச் சிந்தனை கொண்டவர்கள் விட்டுக்கொடுப்பாகவேனும் செயலாற்ற வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்றது முதல், அகிம்சை ரீதியான போராட்டங்கள், முயற்சிகள், பின்னர் ஆயுத ரீதியான போராட்டங்கள் மூலமாக சொல்லொணா இழப்புகளை அனுபவித்த தமிழ் மக்கள் மேலும் மேலும் இழப்புகளையும் கொடுமைகளையும் அனுபவிக்கத் தயாரான நிலையில் இல்லை.

இதனை தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வரும் அனைவரும் பலமுறைகளில் பல்வேறு வழிகளிலும் வெளிப்படுத்தியிருக்கின்றனர் என்ற வகையில், தமிழ் மக்களுக்காக நிரந்தரத் தீர்வுத்திட்டம் கொண்டு வரப்படும் வரையில் 13வது திருத்தச் சட்டத்தினை நீக்குவதற்கு ஆதரவழிப்பது பொருத்தமானதல்ல.

அத்துடன், தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் வழங்கக் கூடாது என்ற நோக்கில் செயற்படும் இரு அமைச்சர்களின் செய்பாடுகளுக்கு சிறுபான்மை அரசியல்வாதிகள் யாரும் ஆதரிக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

என்பதுடன் கண்டிக்கத்தக்கதும், நேர்மை யான அரசியல்வாதிகளுக்குப் பொருத்தமானதுமல்ல.

வடக்குக் கிழக்கை இணைத்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்காத வரையில் 13வது திருத்தச் சட்டத்தினை நீக்குவதற்கு சிறுபான்மையினராகிய நாம் உடன்படுவது இக்காலத்துக்கு ஏற்படையதாக இருக்காது. இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் ஆலோசனைகளை நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளேன்.

அதே நேரம் ஆளம் தரப்பினருடனும் பேசவுள்ளேன். முழு இலங்கைக்கும் ஒரு தீர்வுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னோடியாகவும் காரண கர்த்தாகவும் இருந்தவர்கள் வட கிழக்கு மக்கள் என்பதனைப் புரிந்து கொண்டு கிழக்கின் சிறுபான்மையினரை பிரதி பலிக்கின்ற ஒரேயொரு மாகாண சபையாக இருக்கின்ற காரணத்தால் அனைத்து சிறுபான்மையினரும் இணைந்து முடிவெடுக்க சிறுபான்மை மக்களுக்கெதிராக கொண்டுவரவுள்ள 13வது திருத்தச் சட்டத்துக்கு எதிரான பிரேரணையைத் தடுப்பதற்கு முன்வாருங்கள் என அவர் தெரிவித்திருக்கிறார்.

## மகாண சபை...(தொடர்)

நேற்றுச் செவ்வாய்க்கிழமை மதியம் இரண்டு மணிநேரம் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்ட இலங்கை தாதியர் சங்கத்தின் உறுப்பினர்கள் மருத்துவமனைகளின் முன்பாக இந்த அமைதி ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

தாதியர் நியமனத்தை மாகாணசபைகளின் பொறுப்பில் விட்டால் தாதியரை இணைத்துக்கொள்ளும் நடைமுறையில் உள்ளூர் அரசியல்வாதிகளின் தலையீடும் செல்வாக்கும் உண்டாகுமென்று கொழும்பு தேசிய மருத்துவமனையின் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய கூறினார்.

மத்திய அரசின் கீழிருந்த தாதியர் நியமனத்துக்கான அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதாக தேசிய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் பின்னணியிலேயே இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்படுவதற்கு தாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றபோதிலும், தாதியர் நியமன அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்குவதன்மூலம் அந்த நடைமுறை அரசியல் லாபங்களுக்காக பயன்படுத்தப்படலாம் என்று சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் தீர்மானத்தை ரத்துசெய்வதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டத்தில் இறங்கப்போவதாகவும் இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் கூறினார்.

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்.போதனா வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர்கள், 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை 2 மணித்தியால பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

அரசாங்க தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் ஒன்றுகூடிய தாதி உத்தியோகத்தர்கள் பணிப்பகி'கரிப்பில் ஈடுபட்டனர். யாழ். போதனா வைத்தியசாலையின் தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் என்.நற்குணராஜா தெரிவிக்கையில்,

கடந்த 26ஆம் திகதி சுகாதார அமைச்சுடன் அரசாங்க தாதி உத்தியோகத்தர் சங்க உறுப்பினர்கள் நடத்திய பேச்சுவார்த்தையின்போது தீர்வு கிடைக்காததையடுத்து 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து பணிப்பகி'கரிப்பை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.

ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி வெளியிடப்பட்ட 1779ஆம் வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக்கு, தாதியர்களின் மேலதிக கொடுப்பனவை அதிகரி, மேலதிக கொடுப்பனவுகளை ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாற்று, பழைய சட்டத்திற்கமைய வகுப்புவாரி பதவி உயர்வை உடனே பெற்றுக்கொடு, 5 நாட்களை வேலை நாட்களாக மாற்று போன்ற விடயங்களுக்கு உடனடியாக தீர்வு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளோம் என்றார்.

# புயல் அச்சம் நீங்கினாலும் மழை தொடரும் சாத்தியம்

## ▶ வெள்ளத்தினால் ஏராளமானோர் இடம்பெயர்வு
## ▶ இயல்பு நிலைக்கும் பாதிப்பு

வங்காள விரிகுடாவில் நிலவிய தாழமுக்கம் காரணமாக இலங்கையில் ஏற்பட்டிருந்த புயல் அச்சம் நீங்கியுள்ளது. இந்தப் புயல் தமிழகத்தை நோக்கி திரும்பியிருப்பதனால், இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசங்களை புயல் தாக்கலாம் என விடுக்கப்பட்டிருந்த எச்சரிக்கை நீக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்திருந்தது.

எனினும் வடபகுதியிலும் நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. வடக்கில் அடைமழை தொடர்வதனால் தாழ்ந்த நிலப்பகுதிகள் வெள்ளத்தால் மூடப்பட்டிருக்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றக் கிராமங்கள் பலவற்றில் குடிசைகளுக்குள் வெள்ளம் புகுந்ததனாலும் காற்றினால் கூரைகள் பறந்து, கூரைவிரிப்புகள் அள்ளுண்டு செல்லப்பட்டதனாலும் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து அருகில் உள்ள பாடசாலைகளில் தஞ்சம் புகுந்துள்ளன.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சமைத்த உணவு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் கூரை விரிப்புகள், தரை விரிப்புகள் தேவையான குடும்பங்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கில் தொடர் அடைமழையினால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அம்பலவன் பொக்கணை கடலிலும் நந்திக்கடலிலும் நீர் மட்டம் உயர்வடைந்ததையடுத்து அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான மக்கள் பாதுகாப்புக்காக புதுக்குடியிருப்பை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

சீனியாமோட்டையில் குடியேற்றப்பட்டிருந்த கேப்பாப்பிலவு பகுதி மக்களுடைய குடிசைகளுக்குள்ளே மழை நீர்புகுந்ததனால், அவர்களும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனந்தபுரம் பகுதியில் வீடொன்றிற்குள் மழைநீர் உட்புகுந்ததையடுத்து, வீட்டு உரிமையாளர் முற்றத்தில் மண்ணை அணைத்து நீர் உட்புக முடியாமல் தடுக்க முயற்சித்த போது, மண்வெட்டியில் சிக்கிய வெடிக்காத நிலையிலிருந்த குண்டொன்றை கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தூரத்தில் வைத்து வெடிக்க வைத்துள்ளனர்.

அந்தப் பகுதியில் வீடுகளில் இருந்தவர்கள் அனைவரும் தொலைவில் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னரே, மிகவும் சக்தி வாய்ந்த அந்தக் குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. அப்போது, அது மிகவும் பெரிய சத்தத்துடன் வெடித்ததாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர்.

அடைமழை காரணமாக வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் வருகை மிகவும் குறைந்திருந்ததாகக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். போக்குவரத்து சேவைகளில் ஏற்பட்டிருந்த தாமதம், அசௌகரியங்கள் காரணமாக அரச தனியார் அலுவலகங்களிலும் ஊழியர்களின் வருகை குறைந்துகாணப்பட்டன.

இதேவேளை வடபகுதியில் கடந்த இரண்டு தினங்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாக்கத்தையடுத்து, முல்லைத்தீவு மாவட்டத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. காற்று மழையுடன் கூடிய சீரற்ற காலை நிலை காரணமாக வடக்கு மற்றும் ஏனைய பகுதி மீனவர்கள் கடலுக்குத் தொழிலுக்குச் செல்லவில்லை.

தாழமுக்கம் காரணமாக கடலிலும் காற்றுவீசும் என்றும் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டிருந்தது. இதனால் யாரும் கடலுக்குச் செல்லவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வடபகுதியில் இடியுடன் கூடிய அதிகூடிய மழை வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளதாக கால நிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

காற்றுடன் கூடிய அடை மழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்டவர்களில் சுமார் 4000 குடும்பங்கள் மீண்டும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார். பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு கூரை விரிப்புகள் தரைவிரிப்புக்கள் பொன்றவற்றைத் தருமாறு கோரியிருப்பதாகவும், அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மந்துவில், ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு போன்ற பகுதிகளில் தகரக் கூரைகளைக் கொண்டிருந்த தற்காலிக வீடுகளின் தகரங்ள் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடாரங்களும் பல இடங்களில் காற்றினால் அள்ளிச் செல்லப்பட்டுள்ளது. இதனால் பல குடும்பங்கள் மழையினால் நனைந்து பெரும் சிரமங்களுக்கு உள்ளாக நேர்ந்துள்ளது. வீடுகளின் மீது மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுடன் கருணாநிதிக்கு தொடர்பு உண்டா?

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவத்துடன் முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதிக்கு தொடர்பு உண்டா என முன்னாள் சீ.பி.ஐ அதிகாரியொருவர் கேள்வி எழுப்பியுள்ளார். ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் தொடர்பில் கே.ராகுதாமன் என்ற சீ.பி.ஐ. அதிகாரி புத்தகமொன்றை வெளியிட்டுள்ளார்.


இந்தப் புத்தகத்தில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி கருணாநிதியும், ஸ்ரீபெரம்பத்தூரில் கூட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்ததகாக் குறிப்பிட்டுள்ளார். எனினும், இறுதி நேரத்தில் இந்தக் கூட்டம் இரத்துச் செய்யப்பட்டதாக அவர் இந்தப் புத்தகத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கருணாநிதி ஏன் இந்தக் கூட்டத்தை இரத்துச் செய்தார் என்பது பற்றி இதுவரையில் விசாரணைகள் நடத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார். ஸ்ரீபெரம்பத்தூர் கூட்டத்திற்குச் செல்ல வேண்டாம் என கருணாநிதி ஆலோசனை வழங்கியிருந்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கார்த்திகேயன் என்ற அதிகாரி இது தொடர்பான விசாரணைகளை நடத்த வேண்டாம் என தம்மிடம் கோரியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, பிரச்சார நோக்கில் முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி ரகுதாமன் இவ்வாறான போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாக உயர் அதிகாரி கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பான முக்கியமான சாட்சியமாக இருந்த வீடியோ நாடாவை, புலனாய்வு பிரிவின் தலைவராக இருந்த எம்.கே.நாரயணன் காணாமல் போக செய்துள்ளதாகவும் புதிய நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தியை கொலை செய்த தாணு உள்ளிட்ட குழுவினர் இரண்டரை மணிநேரம்



ஸ்ரீபெரம்புத்தூரில் கூட்டம் நடைபெற்ற இடத்தில் இருந்துள்ளமை அந்த வீடியோ நாடாவில் பதிவாகியுள்ளது.

இந்திய புலனாய்வு பிரிவினர், வீடியோ பிரதியின் மூலப் பிரதியை பெற்று கொண்டு வேறு ஒரு பிரதியை காவற்துறையினருக்கு வழங்கியிருப்பதாக நூலை எழுதியுள்ள கே.ர.கௌதமன் தகவல் வெளியிட்டுள்ளார். வீடியோ பிரதி காணாமல் போனமைக்கு பொறுக் கூற வேண்டிய நாராயணன் தற்போது மேற்கு வங்கத்தின் ஆளுநராக பணியாற்றி வருகிறார்.

# இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் அதிகரிப்பு

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள குளங்ளின் கொள்ளளவுக்கு ஏற்ப நீர் நிறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான மழை பெய்யுமானால் குளங்கள் உடைத்து வெள்ள அனர்த்தம் எற்படக் கூடிய வாய்ப்புகளும் அதிகமானக் காணப்படுகின்றது. கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் நேற்று முன்தினம் காலை 16.4 அடியாக இருந்துள்ளது. அதன் பின்னர் நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் 18.5 ஆக உயர்வடைந்தது.

இரணைமடுக் குளத்தில் 32 கனஅடி வரையுமே நீரைத் தேக்கி வைக்க முடியும், இன்றும் தொடர்ச்சியான மழை பெய்யுமானால் இரணைமடுக் குளக் கட்டுகள் ஆபத்தை எதிர்நோக்கும் என்று நீர்ப்பானசத் திணைக்கள அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் வன்னி மாவட்டத்தில் உள்ள அனைத்துக் குளங்களும் வான் பாயத்தொடங்கியுள்ளது என்றும் மேலும் தெரியவந்துள்ளது.

## இன்றைய இராசி பலன் (01.11.2012)

**நந்தன வருடம் ஐப்பசித் திங்கள் 16ஆம் நாள் வியாழக்கிழமை**

**நட்சத்திரம்** : கார்த்திகை காலை 8.15 வரை அதன் பின் ரோகிணி
**திதி** : திருதியை முழுவதும்
**சுபநேரம்** : 7.34 - 9.04
**இராகுகாலம்** : 1.34 - 3.34
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : சுயநலப் போக்கு, அவமானம், குடும்ப செலவினம்
**இடபம்** : நற்செய்கை, தொழில் முன்னேற்றம், பாராட்டு
**மிதுனம்** : வியாபார விருத்தி, எண்ணம் நிறைவேறும், நண்பர் உதவி
**கடகம்** : தொழில் மந்தம், மனநிம்மதியின்மை, வாகன சுகக் குறைவு
**சிங்கம்** : குடும்ப செலவினம், உடல்நிலை கவனம், தொழில் மாற்றம்
**கன்னி** : காரிய சித்தி, தொழில் விருத்தி, உறவினர் உதவி
**துலாம்** : பணவரவு, வியாபாா முன்னேற்றம், கவனம் தேவை
**விருச்சிகம்** : மன அமைதியின்மை, பயனற்ற செய்கை, குறைகேட்டல்
**தனுசு** : பொறுமை தேவை, வியாபாரப் போட்டி, அதிக செலவு
**மகரம்** : தொழில் ஆர்வம், பணவரவு, உற்சாக மிகுதி
**கும்பம்** : வியாபார விருத்தி, எதிர்பாராத வரவு, நண்பர் பிரச்சினை
**மீனம்** : தொழில் உயர்வு, உல்லாசப் போக்கு, நல்ல சிந்தனை

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# கண்டியில் தாய் ஒருவருக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள்

கண்டி போதனா வைத்தியசாலையில் மற்றும் ஒரு தாய் ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

கண்டி மாப்பனாவதுர பிரதேசத்தை சேர்ந்த பீ.சாந்தி என்ற தாயே ஒரு பிரசவத்தில் மூன்று குழந்தைகளை பிரசவித்துள்ளார்.

குறைமாதப் பிரசவம் காரணமாக இரண்டு பெண் மற்றும் ஒரு ஆண் குழந்தைகள் தீவிர சிகிற்சை பிரிவில் செயற்கைச் சூழலில் வைக்கப்பட்டுள்ள.

குழந்தைகளின் உடல் நிலை சீராகிக் கொண்டு வருவதாகவும் இன்னும் ஓரிரு வாரங்களில் பிள்ளைகளை சாதாரன சூழலிற்கு விடுவிக்க முடியும் என்றும் மகப்பேற்று வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

இக்குழந்தைகளின் பெற்றோர் குறை வருமானம் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எம்.கே.நாராயணன் ராஜிவ் காந்தி கொலை வீடியோவை மறைத்தாரா?

ராஜிவ் படுகொலை தொடர்பான, முக்கிய வீடியோவை, ஐ.பி., உளவு படையின் முன்னாள் தலைவரும், மேற்கு வங்க கவர்னருமான, எம்.கே.நாராயணன் வேண்டுமென்றே மறைத்தார் என்று வெளியான தகவலால், ராஜிவ் இறந்து, 21 ஆண்டுகள் ஆன பிறகு, மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்க கவர்னராக, கடந்த இரண்டு ஆண்டுகளாக பதவி வகிப்பவர், எம்.கே.நாராயணன். முன்னதாக அவர், தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், அதற்கு முன், ஐ.பி., உளவுப் பிரிவின் தலைவராகவும் இருந்தார். கேரளாவைச் சேர்ந்த நாராயணன், ஐ.பி.,தலைவராக இருந்த போது, 1991 மே, 21ல், ஸ்ரீ பெரும் புதூரில், தேர்தல் பிரசாரம் செய்ய வந்த ராஜிவ், படுகொலை செய்யப்பட்டார். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த, தற்கொலைப் படை பெண், தனு, மனித வெடிகுண்டாக செயல்பட்டு, ராஜிவை கொன்றார்.

உலகையே உலுக்கிய இந்த படுகொலை வழக்கு, அவ்வப்போது வெளியாகும் தகவல்களால், பரபரப்படைவது வழக்கம். அந்த வகையில், 21 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ராஜிவ் கொலை வழக்கை விசாரித்த, சி.பி.ஐ., அதிகாரி, கே.ரகோத்தமன், "ராஜிவை கொல்லச் சதி - சி.பி.ஐ., ஆதாரங்கள்" என்ற பெயரில், சமீபத்தில், தமிழில், புத்தகம் ஒன்றை எழுதி வெளியிட்டார். அந்த புத்தகத்தில், ரகோத்தமன் தெரிவித்திருந்த தகவல்களில், எம்.கே.நாராயணன் குறித்த, சில விவரங்கள், டில்லி, மும்பை நகரங்களில் வெளியாகும், டி.என்.ஏ., என்ற நாளிதழில் நேற்று வெளியாகியுள்ளது.

இந்த இரண்டு புத்தகங்களிலும் முக்கியமான விஷயமாக ரகோத்தமன் சொல்வது ஒரு வீடியோ கேசட் மறைக்கப்பட்டு விட்டது என்பதுதான்! ராஜீவ் கொல்லப்பட்ட மறுநாள் அப்போதைய பிரதமர் சந்திரசேகருக்கு ஐ.பி அமைப்பின் தலைவராக இருந்த தற்போதைய மேற்கு வங்க கவர்னர் எம்.கே. நாராயணன் ஒரு கடிதம் எழுதினார். அதில் எங்களிடம் ஒரு முக்கிய கேசட் உள்ளது. அதில் அந்த பெண் மணியை அடையாளம் காண முயற்சிக்கிறோம் என்று கூறியிருக்கிறார். ஆனால் கடைசிவரை ஐ.பி வசம் இருந்த அந்த கேசட் சி.பி.ஐ யிடமும் சரி. வேறு எந்த ஒரு விசாரணை அமைப்பிடமும் ஒப்படைக்கப்படவே இல்லை என்பதுதான் ரகோர்த்தமனின் குற்றச்சாட்டு. ராஜிவ் கொலை வழக்கில் ஹரிபாபு எடுத்த புகைப் படங்கள் தான் பிரதான ஆதாரமாக இருந்தது. இந்த நிலையில் சிவராசன், தணு உள்ளிட்டோர் சில மணி நேரம் ஸ்ரீ பெரும்புதூர் மைதானத்தில் காத்திருந்து ராஜீவை கொலை செய்திருக்கின்றனர். அந்த சில மணி நேரங்களில் அவர்கள் யார், யாருடன் பேசினர்? எப்படி ராஜீவுக்கு மாலையிடும் இடத்துக்கு மெதுவாக நெருங்கினர் என்பது போன்ற விவரங்கள் ஐ.பி வசம் இருந்த கேசட்டில் பதிவாகி இருக்கலாம் என்பதுதான் ரகோத்தமனின் சந்தேகம்.



தமது முந்தைய புத்தகத்தில் இதுபற்றி எழுதியுள்ள ரகோத்தமன், அப்படி ஒரு கசட் கிடைத்தால் மரகதம் சந்திரசேகருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பிரச்சனை வரும் என்று கருதி முழுப் பூசணியை மறைத்து விட்டது ஐ.பி. என்று சாடியுள்ளார். அத்துடன் இறந்த தலைவரை விட இருக்கும் பிரமுகர்கள் முக்கியமாகி விடுகிறார்கள் என்றும் ரகோத்தமன் வருத்தம் தெரிவித்திருக்கிறார். காங்கிரஸ் பிரமுகரான மரகதம் சந்திரசேகர் மூலமே சிவராசன் குழுவினர் ஸ்ரீ பெரும்புதூர் மைதானத்துக்குள் நுழைய முடிந்தது என்பது பல தரப்பிலும் வெளியான தகவல். ஆனால் ராஜீவ் கொலை வழக்கில் அவர்கள் சேர்க்கப்படவில்லை என்பதால் ரகோத்தமன் இத்தகைய சந்தேகத்தை எழுப்பியிருக்கிறார் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள். தற்போதைய புத்தகத்திலும் கசட் பற்றிய எம்.கே. நாராயணின் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 22 ம் தேதிய கடிதம் பற்றியும் இந்த கசட்டுக்கு என்னாச்சு என்றும் மீண்டும் ரகோத்தமன் கேள்வி எழுப்பியிருக்கிறார். ஸ்ரீபெரும்புதூரில், ராஜிவ், பொதுக் கூட்ட மேடைக்கு வரும் போது, அந்த கூட்டத்தில் ஊடுருவிய, ராஜிவ் கொலையாளி தனு, மனித வெடிகுண்டை வெடிக்கச் செய்தார் என, தமிழக அரசால் தெரிவிக்கப்பட்ட தகவல் தவறு. பொதுக்கூட்டம் நடப்பதற்கு, இரண்டரை மணி நேரத்திற்கு முன்பே, தனு அந்த இடத்திற்கு வந்திருந்தாள்.

கொலையாளி தனு, சிலருடன் பேசிக் கொண்டிருந்தாள் என்பதற்கான, வீடியோ ஆதாரம், எம்.கே.நாராயணனுக்குக் கிடைத்தது. அந்த வீடியோவை, வேண்டுமென்றே மறைத்த எம்.கே.நாராயணன், வேறு ஒரு வீடியோவை, வழக்கில் இணைத்து விட்டார். இதன் மூலம் அவர், யாரையோ காப்பாற்ற முயன்றுள்ளார். தான் மறைத்த வீடியோ பற்றி, முன்னாள் பிரதமர், சந்திரசேகருக்கு, எம்.கே.நாராயணன், ரகசிய கடிதம் ஒன்றை எழுதினார் எனவும், இந்தத் தகவல்களை அறிந்த பிறகும், ராஜிவ் கொலை வழக்கின் விசாரணை அதிகாரி, டி.கார்த்திகேயன், உண்மைகளை மறைத்துவிட்டார். இவ்வாறு அந்த பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்று வருடங்களுக்கு மேல் தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ். இளைஞரால் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் ஒருவர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மதாசா நிருபன் என்ற இளைஞரே இவ்வாறு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார். நிருபனின் தந்தை தர்மதாசா, சட்டத்தரணி கே.கணேசயோகனின் ஊடாக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள் ளார்.

பொரளை காவல் நிலையப் பொறுப்பதிகாரி லொக்குஹெட்டி ஹேவா, புலனாய்வுப் பிரிவு பணிப்பாளர், காவல்துறை மா அதிபர் என்.கே.இளங்கக்கோன், பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ, மேலதிக பாதுகாப்புச் செயலாளர் எம்.எஸ். ரட்நாயக்க, சட்ட மா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

எந்த விதமான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தாது மூன்று ஆண்டுகளுக்கு மேல் தடுத்து வைத்திருப்பதாக நிருபன் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

கைது செய்யப்பட்ட காலத்தில் மோசமான முறையில் தாக்கப்பட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

அதிகாரிகள் பலவந்தமான முறையில் பல்வேறு ஆவணங்களில் தம்மிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் மைத்திரிபாலவின் சகோதரருக்கு நிபந்தனைகளுடனான பிணை

மனம்பிட்டிய வனவிலங்கு காரியாலயத்துக்கு சேதம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அமைச்சர் மைத்திரிபால சிறி சேனவின் சகோதரர் பிரியந்த சிறிசேனவை பிணையில் விடுவிக்க பொலன்னறுவை நீதவான் நீதிமன் றம் நேற்று அனுமதி வழங்கியது.

15 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 5 இலட்சம் பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் அவரை விடுதலை செய்ய உத்தரவிடப்பட்டது.

அத்துடன், ஒவ்வொரு மாதமும் முதலாவது மற்றும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் பொலன்னறுவை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று கையெழுத்திடுமாறும் நீதவான் அறுவுறுத்தல் விடுத்துள்ளார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் தூரநோக்கு, சமூக சிந்தனையுடன் வாழ்ந்தவர் குருகுலம் அப்புஜி

### - பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

கிளிநொச்சி மாவட்டத்தில் தூரநோக்கு, சமூக சிந்தனையுடன் வாழ்ந்தவர் குருகுலம் அப்புஜி. அவர் இந்த மாவட்ட மக்களால் நேசிக்கப்படுகின்ற ஒரு மகான், தன்னலமற்ற சேவை மூலம் ஒரு தியாக வாழ்வை வாழ்ந்துகாட்டியவர் எனவேதான் இறந்தும் அப்புஜி வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

இவ்வாறான ஒரு மகானை மறப்பது என்பது ஒரு வரலாற்றுத் தவறாகும் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதிதலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்



நேற்று முன்தினம் (30.10.2012) கிளிநொச்சி ஊற்றுப்புலம் பாடசாலையில் குருகுல பிதாவும் ஊற்றுப்புலம் கிராம தாபகருமான அப்புஜி (வேலுப்பிள்ளை கதிரவேலு) அவர்களின் உருவச்சிலை திறப்பு விழாவும், புதிய பாடசாலை கட்டடத் திறப்பு விழா நிகழ்விலும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அப்புஜி ஒரு சாதாரண மனிதனாக தான் வாழ்ந்த சமூகத்திற்கு தன்னலமற்ற பெரும் சேவையாற்றி இன்று ஒரு மகானாக மாறியிருகின்றார் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு எல்லோருக்கும் பல வழிகளில் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றது ஆனால் அந்தச் சந்தர்ப்பங்களை எல்லோரும் சரியாக பயன்படுத் துவதில்லை.

அப்புஜி அவர்கள் 1962 ஆம் ஆண்டே வாழ்வாதார முன்னேற்றத்திற்கான தொழில் பயிற்சி பற்றி சிந்தித்து அக்கால கட்டத்திலேயே பல்வேறு தொழில் பயிற்சிகளையும் ஆரம்பித்து செயற்படுத்தி வந்தவர் என அறிகின்ற போது அவர் இந்த சமூகத்தின் முன்னேற்றத்தில் எந்தளவுக்கு அக்கறை கொண்டு செயற்பட்டுள்ளார் என்பதை இலகுவாக புரிந்துகொள்ள முடியும் அந்த வகையில் ஊற்றுப்புலம் கிராமத்தையும் உருவாக்கி அப்புஜி அவர்களின் உருவச்சிலையினை செய்வித்து இந்த கிராமத்தில் அவரினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் திரை நீக்கம் செய்து வைப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பெருமையாக கருதுகிறேன் என்றார்.

பாடசாலை முதல்வர் செல்வி சந்திரவதனி தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

## அடை மழை, புயல், வெள்ளம்:

# 5,583 குடும்பங்களைச் சேர்ந்த 19,785 பேர் முல்லைத்தீவில் பாதிப்பு

- ☒ 503 குடும்பங்களைச் சேர்ந்த 1721 பேர் இடப்பெயர்வு
- ☒ மன்னாரில் 469 குடும்பங்களைச் சேர்ந்த 1,737 பேர் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்த கடும் மழையை அடுத்து 52 கிராம அலுவலகர் பிரிவுகளில் 5,583 குடும்பங்களைச் சேர்ந்த 19,785 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்தார்.

இவர்களில் 503 குடும்பங்களைச் சேர்ந்த 1,721 பேர் இடம்பெயர்ந்த நிலையில் தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மழை காரணமாக இடம்பெயர்ந்தவர்கள் கொக்குத்தொடுவாய் மேற்கு மற்றும் கிழக்கு, இரணைப்பாலை, முள்ளிவாய்க்கால் கிழக்கு, மந்துவில், மல்லிகைத்தீவு ஆனந்தபுரம், திருமுறிகண்டி, பிராட்டிகுளம் ஆகிய பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றன.

மழை தொடர்ந்து பெய்துவருவதால் இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழையைத் தொடர்ந்து இதுவரையில் 469 குடும்பங்களைச் சேர்ந்த 1, 737 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகமட் றியாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார், நானாட்டான், முசலி, மடு ஆகிய 4 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தங்களது வீடுகளிலிருந்து வெளியேறி உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை, சிலாபத்துறை - புத்தளம் பிரதான வீதி மற்றும்



சங்குப்பிட்டி வீதிகளூடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சங்குப்பிட்டி வீதியில் தேத்தாவாடி மற்றும் பாலியாறு பிரதான வீதிகளின் இருமருங்கிலும் வெள்ளநீர் பாய்வதால் இவ்வீதியூடான போக்குவரத்து தடைசெய்யப்பட்ட நிலையில், ஏ 9 வீதியூடாக மாற்றப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஈடுபட்டுவருவதாகவும் கூறினார்.

## தூக்கத்தில் இருந்தவேளை விஷப்பாம்பு தீண்டியது!

### சிறுமி உயிரிழப்பு; தாய் உயிர்பிழைப்பு

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த 27 வயது இளம் தாயையும் அவரின் 10வயது மகளையும் நள்ளிரவு வேளையில் பாம்பு தீண்டியதில் தாய் உயிர் பிழைக்க, மகள் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இச்சம்பவம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள 40 வட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இரவு தாயான வி. மகேஸ்வரியும் அவரின் மகளான கிருசாந்தினியும் அருகே படுத்து உறங்கினார்கள். நள்ளிரவு ஏதோ தனது உடம்பில் ஊர்வதை உணர்ந்து எழுந்து பார்த்த தாயார் அப்பாம்பு தனக்கு தடித்திருப்பதை உணர்ந்து அருகில் உள்ள விஷ வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெற்றார்.

இந்தப் பாம்பு அவரின் மகளுக்கு கடித்துள்ளதை அவரும் அறியவில்லை. கிருசாந்தினிக்கு விஷம் உடலில் பர்வி அவர் அவஸ்தைக்கு ஆளான பின்னரே அவரையும் வைத்தியரிடம் கொண்டு சென்றனர். எனினும் காலம் கடந்து விட்டதால் சிறுமி உயிரிழந்தார்.

## மன்னாரில் கடும் மழை கடல் கொந்தளிப்பால் மீனவர்கள் பாதிப்பு

மன்னாரில் தொடர்ந்து மழை பெய்துவருவதுடன், அங்கு தற்போது கடற்கொந்தளிப்புடன் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் மன்னாரில் போக்குவரத்துக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் கடந்த திங்கட்கிழமை இரவு முதல் மழையுடன் வீசிய கடும் காற்று காரணமாக மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லாதுள்ளதாகவும் கரையோரத்திலிருந்த தங்களது படகுகளை பாதுகாப்பான இடத்திற்கு அவர்கள் கொண்டுசென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் கரைவலை மீன்பிடித் தொழிலாளர்கள் தொழிலுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரில் கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிவரை 19.3 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளி மண்டலவியல் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட அலுவலக அதி காரியொருவர் தெரிவித்தார்.

# இன, மத பேதங்களின்றி நாட்டை கட்டியெழுப்ப பாடுபடவேண்டும்

### அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன

"இன மத பேதங்களின்றி அனைவரும் இந்த நாட்டை கட்டியெழுப்ப பாடுபட வேண்டும்" என்று கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் பிரதி அமைச்சர் எஸ். எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை யாழ் கமநலசேவைத் திணைக்கத்தின் 50ஆவது ஆண்டு நிறையை முன்னிட்டு ஏற்பாடு



செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் நடைபெற்ற யுத்தம் காரணமாக பல அபிவிருத்திகள் தடைப்பட்டிருந்தன. யுத்தத்திற்குப் பின்னர் நாட்டில் பல்வேறு அபிவிருத்திகள் அரசங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு மாணவர்களின் கல்விக்கும் அரசு பல்வேறு திட்டங்களை அமுல் படுத்தி வருகின்றது.

இந்தச்ச சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தி இன, மத, மொழி பேதங்கள் இன்றி நாட்டைக்கட்டி எழுப்ப அனைவரும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் சிறந்த கல்விமான்கள் பல அறிஞர்கள் இருந்திருக்கின்றார்கள் இன்று எமக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பை இளய சமுதாயம் சரிவரப் பயன்படுத்தி சிறந்த கல்வியாளர்களாக, அறிஞர்களாக, பொறியியலாளர்களாக உருவாகி நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் கமநல புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 17 மாணவர்களுக்கு தலா 20,000 ரூபா வைப்பிலிடப்பட்ட வங்கிப்புத்தகமும், தெரிவு செய்யப்பட்ட 7 விவசாயிகளுக்கு 4 நான்கு சக்கர உழவு இயந்திரமும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டது.

## வவுனியாவில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு

வவுனியா காமினி மகா வித்தயாலயத்திற்கு அருகாமையில் உள்ள புகையிரத கடவையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு புகையிரதத்துடன் மோதுண்டு ஒருவர் மரணமாகியுள்ளார்.

ஓமந்தையில் இருந்து கொழும்பு செல்வதற்காக வவுனியா புகையிரத நிலையம் நோக்கி வந்து கொண்டிருந்த புகையிரதத்திலேயே இவர் மோதுண்டுள்ளார்.

மோதுண்டு இறந்தவர் தொடர்பான விபரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என பொலிஸார் தெரிவித்த போதிலும் இந்த மரணம் தற்கொலையா அல்லது விபத்தா என பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கஞ்சா விற்ற பெண்ணுக்கு சிறை

கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்ததாக நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்ட பெண்ணொருவருக்கு அநுராதபுரம் பிரதான நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமாகிய் ருவந்திக்கா மாறப்பன பத்து வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையை வழங்கி தீர்ப்பளித்தார்.

இதற்கு மேலதிகமாக குற்றவாளியான பெண்ணுக்கு ஐம்பதாயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. மதவாச்சி பொலிசார் குறித்த பெண்மணியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது இத்தண்டனை விதிக்கப்பட்டது.

## மட்டு. மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் காலநிலை மாற்றம் காரணமாக மீன்பிடித் தொழிலில் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 26 ஆயிரம் குடும்பங்கள் முழுநேர மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளன.. கடுமையான கடல் கொந்தளிப்பு காரணமாக மீன்பிடி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மீனவர்கள் பொருளாதார ரீதியிலான பல்வேறு கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளனர்.

கடற்கரையோரங்களிலுள்ள மீன்பிடி படகுகள் பல்வேறு இடங்களிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. மீன்வாடிகள் என்பன கடந்த பல நாட்களாக இழுத்து மூடப்பட்டுள்ளன. மீன்பிடி நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதால் சந்தைகளில் கடல் மீன்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன.

## ஆணின் சடலம் மீட்பு

நானுஓயா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பங்களாவத்தைத் தோட்டப்பகுதியில் ஆணொருவரின் சடலமொன்றினை நானுஓயா பொலிஸார் நேற்று (31) மீட்டுள்ளனர்.

நானுஓயா பொலிஸாருக்கு நேற்று (31) காலை கிடைத்தத் தகவலொன்றினைத் தொடர்ந்து நானுஓயா நகருக்கு அருகில் உள்ள பிரதான பாதையில் பங்களாவத்தைத் தோட்டத்தின் காட்டுப்பகுதியில் இந்தச்சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

30 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நீதவானின் விசாரணைக்காக சடலம் அதே இடத்தில் உள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
நவம்பர் மாதம் 01ஆம் திகதி வியாழக்கிழமை

## அரசியல் தலைவர்களே! அப்பாவிகளிடம் மன்னிப்புக் கேளுங்கள்

முன்னாள் சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் கடந்த மார்ச் மாதம் ஐந்தாம் திகதி இலங்கை யுத்த விவகாரத்தில் அக்கறை காட்டும் சில நாடுகளின் பிரதிநிதிகளிடம் கலந்துரையாடலொன்றினை நடத்தினார். அப்போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பப்பட்டன. திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், மூதூரில் பிரான்ஸ் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உள்ளூர் ஊழியர்கள் பதினேழு பேர் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பப்பட்டன. இந்த இரண்டு படுகொலைகள் தொடர்பாகவும் மீள் விசாரணை நடத்தப்படுமென்று மொகான் பீரிஸ் அப்போது உறுதியளித்திருந்தார்.

இந்த வருடம் முடிவதற்கு முன்னதாகவே மீள் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுக் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவரென்று தற்போதைய மேலதிக சட்ட மா அதிபர் சுகத கம்லத் உறுதிமொழி அளித்துள்ளார். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் தமிழையே பேச்சு மொழியாகக் கொண்டவர்கள். இதற்கும் அப்பால் அவர்கள் மனிதர்கள். அகால மரணங்களால் - அதுவும் இவ்வாறான துயர மரணங்களால் ஏற்படும் இழப்புகள், அவர்களின் நெருங்கிய உறவுகளுக்கு எந்தளவு துயரத்தை ஏற்படுத்துமென்பது நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்று.

யுத்தச் சூழ்நிலையில்தான் இந்தப் படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன. கொல்லப்பட்டவர்கள் அனைவருமே தமிழ் பேசுபவர்கள். எனவே தமிழ்பேசும் மக்கள் மத்தியில் இந்த மரணங்கள் ஒரு கொதி நிலையை ஏற்படுத்தும் என்பது தவிர்க்க முடியாதது. அது மட்டுமல்ல, யுத்தத்தில் ஈடுபட்ட தமிழர் தரப்பினரால் இதுவொரு பிரசார யுத்தமாகவும் பயன்படுத்தப்படுகிறது. இதனாலேயே சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நெருக்கடிக் குழு, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அமைப்புகள் நீதி விசாரணையைக் கோருகின்றன. பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டென்றும் வலியுறுத்துகின்றன.

படையினரும், புலிகளும்தான் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள். இந்த இரண்டு தரப்புகளில் ஒன்றுதான் குற்றவாளியாக இருக்க முடியும். சில வேளைகளில் இரு தரப்புகளுமே குற்றவாளிகளாக இருக்க முடியும். படையினர் எல்லோரும் காந்திகளோ புத்தபெருமான்களோ அல்லர். புலிகளும் அதே வகையறாக்களைச் சேர்ந்தவர்கள்தான். அப்பாவித் தமிழ் மக்களுக்குள் பதுங்கி நின்றுகொண்டு படையினரைத் தாக்குவது, புலிகள் காலங் காலமாகக் கடைப்பிடித்துவந்த தந்திரோபாயம். படையினர் பதில் தாக்குதல் நடத்துவார்கள்., அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவார்கள்., அப்போது தமிழ் மக்கள் தங்களை ஆதரிப்பார்கள்., சர்வதேச ரீதியாக இலங்கை அரசுக்கு எதிரான கருத்துருவாக்கங்களை மேற்கொள்ள முடியும். இதுவே புலிகள் கடைப்பிடித்து வந்த கடைகெட்ட தந்திரோபாயம். அதற்காகப் படையினர் இந்தக் கொடூரங்களைப் புரியவில்லையென்று கூறுவதற்கு நாம் தயாரில்லை. ஏனெனில் கடந்த கால வரலாறு இரு தரப்பினரையும் குற்றவாளிக் கூண்டுக்குள் ஏற்ற வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

தென்னிலங்கையில் புலிகள் அப்பாவி மக்களை இலக்கு வைத்துக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள். எல்லைக் கிராமங்களில் வாழும் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். எல்லைக் கிராமங்களில் வாழும் அப்பாவிச் சிங்கள மக்கள். பௌத்த மக்களின் புனித தலமான தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இதே விதமான தவறுகளைப் படையினர் செய்யவில்லையென்று சொல்ல முடியாது. கொக்கட்டிச்சோலை, மைலந்தன்னை, வவுனியா உட்படப் பல்வேறு இடங்களில் நிகழ்ந்த கொடூரங்களின் இரத்த சாட்சியங்கள் இன்னமும் மக்கள் மனதிலிருந்து மறையவில்லை. இந்த இரு தரப்புப் படுகொலைகள் எல்லாம் அப்பாவித் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் இனமுறுகலையும் இனக் குரோதங்களையும்தான் வளர்த்து விட்டிருக்கிறது.

ஆனால், அமெரிக்கா, பிரிட்டன் ஏன் ஐ.நா.வும் கூட வேறுநாடுகளில் யுத்தக் குற்றங்களைப் புரிந்திருக்கிறார்கள். ஈரானுக்கு எதிராக ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசெய்னுக்கு ஆயுதங்களும், ஆதரவும் அளித்த நாடுதான் அமெரிக்கா. பின்னர் ஈராக் மீது ஆக்கிரமிப்பு யுத்தமொன்றினைத் தொடுத்து, முதல் மூன்று மாதங்களில் எட்டு இலட்சம் ஈராக்கியர்களைக் கொன்று குவித்த நாடு அமெரிக்கா. ஈராக்கில் அமெரிக்கா நடத்திய ஆக்கிரமிப்பும், யுத்தமும் சட்ட பூர்வமானதா என்று ஐ.நா.என்றாவது கேள்வி எழுப்பியிருக்கிறதா?


இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற அகோர யுத்தத்தின் கோர வடுக்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் உள்ளங்களில் இன்னமும் உள்ளன. இந்த நிலையில் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்த ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டுவது மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

"சகல தரப்பு அரசியல் தலைவர்களின் கூட்டுத் தவறுகளின் வெளிப்பாடாகவே இந்த மோதல் இடம்பெற்றது. இவ்வாறான மோதல் மீண்டும் ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும். அரசியல் தலைவர்களின் கூட்டுத் தவறுகளின் விளைவாக ஏற்பட்ட இந்த மோதலால் பாதிக்கப்பட்ட அனைத்து அப்பாவி மக்களிடமும் இந்தத் தலைவர்கள் மன்னிப்புக் கோர வேண்டும். மன்னிப்புக் கோரும் கூட்டுப் பிரகடனமொன்றினை வெளியிடுவதற்காகச் சகல தரப்புகளையும் சேர்ந்த அரசியல் தலைவர்கள் ஒருவரோடொருவர் பணிவாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்"

அற்புதமான ஆலோசனை இது. தவறுகளுக்கான கூட்டுப் பொறுப்புகளைத் தலைவர்கள் ஏற்று அப்பாவி மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# 13ஆவது திருத்தத்திற்கு எதிரான கோஷத்தோடு தெரிவுக்குழு அமைத்தல் சாத்தியமாகுமா?



13ஆவது அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின் மூலம் நாடு என்ன பயனை அடைந்து இருக்கிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கேள்வி எழுப்பியிருக்கிறார். அதேவேளை 13ஆவது அரசியலமைப்புத் திருத்திற்காக தமிழ் கட்சிகளும் இடதுசாரி கட்சிகளும் குரல் கொடுத்து வருகின்றன. 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தால் என்ன தீங்கு ஏற்பட்டது என்பது தான் அவர்களின் கேள்வியாக இருக்கிறது.

நன்றாக கவனித்துப் பார்த்தால் இந்த இரண்டு சாராரும் உண்மையைத் தான் பேசுகிறார்கள், நியாயமான கேள்வியைத் தான் கேட்கிறார்கள். அமரசிங்க கேட்பதைப் போல் உண்மையிலேயே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தால் ஏதாவது நன்மை நாட்டுக்கு கிடைத்திருக்கிறதா? அதன் நோக்கம் நிறைவேறியிருக்கிறதா?

இனப் பிரச்சினைக்கு தீர்வாகவே 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது அறிமுகப்படுத்தப்பட்டது. 25 ஆண்டுகள் கழிந்தும் தமது பிரச்சினைகள் தீர்ந்ததாக தமிழர்கள் உணரவில்லை. அதாவது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் நோக்கம் நிறைவேறவில்லை. அதனால் தான் தமிழ் தலைவர்கள் புதிய தீர்வுகளை கேட்கிறார்கள்.

மறுபுறத்தில் மாகாண சபைகளை எதிர்ப்பதற்காக, அச்சபைகளால் நாட்டுக்கு என்ன தான் தீங்கு இழைக்கப் பட்டுள்ளது என்றும் கேள்வியெழுப்பலாம். மாகாண சபைகள் நாட்டு பிரிவினைக்கு இட்டுச் செல்கிறது என்று சில பேரினவாத தலைவர்கள் வாதிடலாம். ஆனால் அவ்வாறானோர் மறந்துவிடும் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால் இலங்கையில் பிரிவினைவாதமானது மாகாண சபைகளோ அல்லது அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த அதிகாரப் பரவலாக்கல் என்ற எண்ணக்கருவோ அறிமுகப் படுத்தப்படுவதற்கு முன்னரே உருவாகியதொன்றாகும் என்பதே.

சரியாகக் கூறுவதாயின் 13ஆவது அரசியலமைப்பத் திருத்தமோ அல்லது மாகாண சபைகளோ பிரிவினை வாதத்தைக் கொண்டு வரவில்லை. மாறாக, பிரிவினை வாதம் தான் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தையும் அதன் மூலம் மாகாண சபைகளையும் கொண்டு வந்தது.

இலங்கையில் பிரிவினைவாதமானது 1970களில் தான் கவனத்திற்கொள்ளக் கூடிய வகையில் தோற்றம் பெற்றது. 1976ஆம் ஆண்டு மே மாதத்தில் தான் தமிழர் விடுதலை கூட்டணியின் வட்டுக்கோட்டை மாநாட்டின் போது அது உத்தியோகபூர்வமாக அரசியல் களத்திற்கு வந்தது.

இவ்வாறு களத்திற்கு வந்த பிரிவினைவாதத்திற்கு பரிகாரமாகவே இந்திய வெளியுறவுச் செயலாளர்களான ஜீ.பார்த்தசாரதி மற்றும் ரொமேஷ் பண்டாரி ஆகியோரின் தலையீட்டில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான இலங்கை அரசாங்கம் 1980களின் ஆரம்பத்தில் அதிகார பரவலாக்கல் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டது.

அதன் பிரகாரம் 1984ஆம் ஆண்டு நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டின் போதும் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற அரசியல் கட்சி மாநாட்டின் (PPC) போதும் மாகாண சபைகளை அறிமுகப்படுத்துவது பற்றி ஆராயப்பட்டது. இறுதியில் வேறு சில பூகோள அரசியல் காரணங்களுக்காக இந்தியா பலாத்காரத்தை பாவித்து 1987ஆம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கை அரசாங்கம் 13ஆவது அரசியலமைப்பத் திருத்தத்தையும் அதன் மூலம் மாகாண சபைகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்தது.

- எஸ்.எஸ்.எம்.ஜயூப்

இது தான் வரலாறு. எனவே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தமோ அல்லது மாகாண சபைகளோ நாட்டுப் பிரிவினைக்கு இட்டுச் செல்கிறது என்று வாதிட முடியாது.

இப்போது 13ஆவது அரியலமைப்புத் திருத்தம் தொடர்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள விவாதம் அச்சட்டத் திருத்தம் நன்மையானது என்பதற்காகவோ அல்லது தீமையானது என்பதற்காகவோ ஏற்பட்டதல்ல. இது வேறு அரசியல் காரணங்களுக்காக உருவாக்கப்பட்ட ஒன்றாகும். குறிப்பாக திவிநெகும சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்ள மாகாண சபைகளின் அனுமதி வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியமையினால் ஏற்பட்ட நிலைமையாகும்.

எனினும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று எழுப்பப்பட்ட கோஷத்தின் காரம் தற்போது குறைந்து வருகிறது. ஜனாதிபதியின் சகோதரர் என்ற காரணத்தினால் ஏறத்தாழ ஜனாதிபதியைப் போல் நடந்து கொள்ளும் அதேபோல் மக்களாலும் ஜனாதிபதியைப் போல் மதிக்கப்படும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தான் இம் முறை 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரான போரை ஆரம்பித்து வைத்தார். ஆனால் அந்தக் காரணத்தையும் மதியாது ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்ப்பவர்களை எதிர்க்க முன் வந்துள்ளனர்.

அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ வித்தாரண மற்றும் டியூ குணசேகர போன்ற இடதுசாரிகள் ஆரம்பத்திலேயே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரான கருத்துக்களை சாடி வந்தனர். இப்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிரானவர்களைப் பொருட்படுத்தாததைப் போல் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இவர்களில் முதலாவதாக அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல்ல 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மாற்றியமைக்க அரசாங்கம் எவ்வித முடிவையும் எடுக்கவில்லை என்றார். அரசாங்கம் கோட்டாபய ராஜபக்ஷவின் கருத்தை ஏற்று 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கும் அறிகுறிகள் இருந்திருந்தால் ரமபுக்வெல்ல ஒருபோதும் அவ்வாறு கூறியிருக்க மாட்டார்.

அதனை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவும் இதே கருத்தை வெளியிட்டு இருந்தார். சிலவேளை சர்வதேச நெருக்குதல் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக அரசாங்கத்திற்குள் வளர்ந்து வந்த நிலைப்பாட்டை முடக்கியிருக்கலாம்.

ஒக்டோபர் 22ஆம் திகதி முதல் நவம்பர் 5ஆம் திகதி வரை ஐ.நா. மனித உரிமை பேரவையின் உலகளாவிய இடைக்கால மீளாய்வுக் கூட்டங்கள் நடைபெறவிருக்கின்றன. நவம்பர் மாதம் 1ஆம் திகதிய கூட்டத்தில் இலங்கை தொடர்பான விடயங்கள் ஆராயப்படவிருக்கின்றன. அப்போது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தைப் பற்றிய கேள்வியொன்றும் இலங்கையிடம் கேட்கப்படவிருக்கிறது என தெரிய வருகிறது. போதாக்குறைக்கு இலங்கையைப் பற்றி மீளாய்வு

(7ஆம் பக்கம் பார்க்க)

# 492 சன் சீ கப்பல் பயணிகளில் 20 பேரின் புகலிடக் கோரிக்கையை கனடா ஏற்றுள்ளது

சன் சீ கப்பல் மூலம் கனடாவில் புகலிடம் கோரியோரிய 492 பேரில் இதுவரையில் 20 பேருக்கு மட்டுமே புகலிடம் வழங்கப்பட்டுள்ளது. 35 புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்கள் இதுவரையில் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டு புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர். கனடாவின் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் விக் டோவ்ஸ் இந்தப் புள்ளிவிபரத் தகவல்களை வெளியிட்டுள்ளார். 2010ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் திகதி சன் சீ கப்பல் பயணிகள் 492 பேரும் கனடா சென்று புகலிடம் கோரியிருந்தனர்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் கப்பலில் பயணித்த 23 பேர் தடுத்து வைக்கப்பட்டனர். ஆட்கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஆறு பேருக்கு எதிராக கனேடிய நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 13ஆவது திருத்தத்திற்கு...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யும் குழுவிற்கு இந்தியாவே தலைமை தாங்குகிறது.

இதற்கிடையே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் சிற்பியான இந்திய அரசாங்கம் அத்திருத்தத்தை எதிர்த்து கருத்து வெளியிட்ட கோட்டாபய ராஜபக்ஷவை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. ஆனால் கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட அவரது இந்திய விஜயத்தின் போது 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றிய விடயம் ஆராயப்படவில்லை.

அது சரி தான். ஏனெனில் இலங்கையில் என்ன அந்தஸ்த்தில் அவர் இருந்தாலும் இந்தியாவுக்கு அவர் ஒரு அதியாரி மட்டுமே. அதுவும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த அதிகாரி மட்டுமே. அவரோடு இந்தியா அரசியல் விடயங்களை ஆராயப் போவதில்லை.

ஆனால் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக அவர் கருத்து வெளியிட்டவுடன் அவர் இந்திய அதிகாரிகளை சந்திக்கப் போகிறார் என்ற உணர்வே அரசாங்கத்தை சிந்திக்கச் செய்திருக்க வேண்டும். எனவே தான் அமைச்சர்களான ரம்புக்வெல்லவும் சிறிசேனவும் "நாங்கள் அப்படி ஒன்றும் செய்யப் போவதில்லை" என்ற தோரணையில் கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள் போலும்.

முக்கியமானதோர் விடயம் என்னவென்றால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவென நியமிக்கப்படவிருக்கும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் சேர்ந்து கொள்ளுமாறு அரசாங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பை வற்புறுத்திக் கொண்டு இருக்கும் பின்னணியிலேயே அரசாங்கத்திற்குள் இருந்தே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக கோஷங்கள் எழுந்தன.

அதிகார பரவலாக்கலுக்கு எதிரான கருத்துக்களைக் கொண்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அதிகமாக நியமிக்கப்படும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தாம் அங்கம் வகிப்பதில் பயனில்லை என்பது தெரிவுக்குழுவில் சேராதிருப்பதற்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்வைக்கும் ஒரு வாதமாகும். அவ்வாறாயின் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள்வதே அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இனப் பிரச்சினையை தீர்க்கும் உண்மையான நோக்கம் அரசாங்கத்திடம் இருந்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பை தெரிவுக்குழுவில் சேர்த்துக் கொள்ளவே அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அந்த நோக்கம் இல்லாவிட்டாலும் அந்த நோக்கம் இருப்பதைப் போலவே அரசாங்கம் உலகுக்கு காட்டிக் கொள்கிறது. அதற்காகவும் அரசாங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பைத் தெரிவுக் குழுவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அவ்வாறிருக்க, அதிகார பரவலாக்கல் முறையையே ஒழிப்பதாக அரசாங்கத்திற்குள் ஜனாதிபதிக்கு சமமான அந்தஸத்திலுள்ளவர்கள் கர்ஜிக்கும் நிலையில் அதிகார பரவலாக்கல் முறையை பலப்படுத்த வேண்டும் என்று கூறும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் தெரிவுக்குழுவில் சேர்வதற்கான நம்பிக்கை உருவாகாது.

# பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் ஐ.ம.சு.கூட்டமைப்பு உறுப்பினர்கள் கையொப்பம்

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் 118 ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானமொன்றை பாராளுமன்றில் சமர்ப்பிப்பது தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆளும் கட்சியினர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஏற்கனவே 118 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்கள் திரட்டப்பட்டு விட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

விரைவில் இந்த தீர்மானம் குறித்த யோசனைத் திட்டம் சபாநாயகர் சமால் ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட உள்ளது. அமைச்சர்களான தினேஷ் குண வர்தன, ரவூப் ஹக்கீம், டக்ளஸ் தேவானந்தா, சம்பிக்க ரணவக்க, திஸ்ஸ வித்தாரண உள்ளிட்ட பலர் இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் நம்பிக்கையில்லா தீர்மானத்தில் கையொப்பமிட்டிருந்தால் சபாநாயகரினால் குறித்த தீர்மானத்தை பாராளுமன்றில் சமர்ப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் இலங்கை பற்றிய அனைத்துலக ஆவர்தன பரிசீலனை

## - பிராட் அடம்ஸ்

"இலங்கையின் மனித உரிமை நிலைமை மோசமடைந்து வருவது தொடர்பாக இலங்கையை கேள்விக்கு உள்ளாக்க அனைத்துலக ஆவர்த்தன பரிசீலனையை அரசாங்கங்கள் ஓர் அரங்கமாக பயன்படுத்த வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச சிவில் சமூக குழுக்களிடமிருந்து கடும் அழுத்தங்கள் வருகின்றன"

என்று மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் ஆசிய பணிப்பாளர் பிராட் அடம்ஸ் கூறினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் எவ்வளவு தூரம் நிறைவேற்றியுள்ளது என்பதையும் மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் இலங்கை என்ன சாதித்துள்ளது என்பதையும் பொறுத்தே ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இடம்பெறவுள்ள இலங்கை பற்றிய அனைத்துலக ஆவர்தன பரிசீலனையை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் சிபாரிசுகள் அமையும் என நம்புவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்தது.

இன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையின் இலங்கை பற்றிய அனைத்துலக ஆவர்தன பரிசீலனைக்கு இலங்கை அரசாங்கம், சிவில் சமூக குழுககள் மற்றும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆகியன தங்களது அறிக்கைகளை அனுப்பியுள்ளன.

இந்த அறிக்கைகளை இந்தியா, பெனின், ஸ்பெய்ன் ஆகிய நாடுகள் ஆராய்ந்து தங்களது பரிந்துரைகளை மேற்கொள்ளும். இந்த மூன்று நாடுகளும் எழுமாற்று முறையில் தெரிவு செய்யப்பட்டவை.

துரதிர்ஷ்டவசமாக இந்த மூன்று நாடுகளும் இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் வாக்களித்தவையாகின்றன.


மனித உரிமைகளுக்கென ஜனாதிபதியின் விசேட தூதுவரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க, ஜெனீவா செல்லும் தூதுகுழுவுக்கு தலைமை தாங்குவார். இலங்கையில் பல்வேறு பொறுப்புகள் இருப்பதனால் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அங்கு போகமாட்டார் என தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியா எமக்கு பெரும் தலைவன் இல்லை 13ஆவது திருத்தம் நீக்கப்படவே வேண்டும்

திவிநெகும சட்டமூலம் தோற்றாலும் வெற்றிப்பெற்றாலும் 13வது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் கட்டாயம் நீக்கப்பட வேண்டும் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். நாட்டின் ஒருமைப்பாடு, மாகாண சபை முறைமை, திவிநெகும சட்டமூலம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் உரை யாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

திவிநெகும தோற்றாலும் வெற்றிப்பெற்றாலும் 13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை தோற்கடிக்க வேண்டும். இந்த சட்ட மூலம் பலவந்தமாக கொண்டு வரப்பட்டது. இதனை நீக்க எவரும் அச்சமடையத் தேவையில்லை.

இந்தியா எமக்கு பெரும் தலைவன் இல்லை எனவும் குணதாச அமரசேகர கூறியுள்ளார்.



1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள். இந்நிகழ்வின் 22ஆவது வருடத்தை நினைவுகூருமுகமாகயாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ்- கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் ஒழுங்கு செய்த பொதுகூட்டத்தில் பேராசிரியர் எஸ்.எச்.ஹஸ்புள்ளா, இரா. செல்வவடிவேல் உரையாற்றுகின்றார். (மீரான்)



# விவசாயத்தின் தோற்றம் பற்றிய பிரச்சனைகள்

விவசாயம் எங்கே தோன்றியது என்பதைக் கண்டுபிடிப்பது எவ்வாறு? பல்வேறுபட்ட பகுதிகளில், பல்வேறு கண்டங்களில் சுயேச்சையாக தோன்றியதா? பூர்வீக விவசாயத்தின் புவியியல் பகுதிகளை எவ்விதம் நிர்ணயம் செய்து விளக்குவது? எவ்வகைத் தாவரங்கள் முதலில் பயிர் செய்யப்பட்டன? முதலில் பயிர் செய்யப்பட்ட தாவரங்களின் மூல ஆதாரங்களை எங்ஙனம் கண்டுபிடிப்பது? முதன் முதலில் வீடுகளில் வளர்க்கப்பட்ட விலங்குகளுக்கும் முதன் முதலில் பயிரிடப்பட்ட தாவரங்களுக்கும், ஏற்கனவே காடுகளில் அவை தானாக வளர்ந்தபோது இருந்த தொடர்புகள் என்ன? பயிரிடப்பட்ட தாவரங்களும் வளர்க்கப்பட்ட விலங்குகளும் எத்தகைய பரிணாமகதியில் வளர்ச்சி பெற்றன? பூர்வீக விவசாய நாகரிகங்கள் எவ்வாறு இணைக்கப்பட்டிருந்தன? பல்வேறுபட்ட பிராந்தியங்களில் பூர்வீக விவசாயத்தில் எத்தகைய கருவிகள் பயன்படுத்தப்பட்டன?

தீர்க்கமான பொருள் முதல்வாத அடிப்படை நிலைபாடுகளிலிருந்து நோக்கும்போது இந்த வரலாற்று ரீதியான வினாக்கள் யதார்த்தமானவையாகவும், நவீன விவசாயம் சம்பந்தமாக முக்கியத்துவம் உடையனவும் ஆகும். விவசாயத் தோற்றம் பற்றிய ஆய்வும் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்ட தாவரங்களைப் பற்றியும், விலங்குகளைப் பற்றியும் இயக்க ஆற்றல் கண்ணோட்டத்திலிருந்து அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. பண்டைய அறிவு வளர்ச்சியைத் தெரிந்து கொள்வதன் மூலம் எந்த மூலங்களிலிருந்து விவசாயம் ஆரம்பமானது என்கிற வரலாற்றுப்பூர்வமான வளர்ச்சியை நாம் முற்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். சாகுபடி செய்யப்படும் தாவரங்களையும் வீட்டில் வளர்க்கப்படும் விலங்குகளையும் இன்றைய தேவைகளுக்கு ஏற்றவாறு எவ்வாறு அபிவிருத்தி செய்வது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பகால அரச வம்சங்களின் புதைகுழிகளான பாரோக்ஸில் கோதுமையும், பார்லியும் காணப்பட்டது.

எத்தகைய தாவரங்களிலிருந்து தற்காலப் பயிர்கள் உருவாக்கப்பட்டன என்னும் மூலாதாரத்தைக் தெரிந்து கொள்வதே ஆய்வாளர்களின் முக்கிய ஆர்வமாகும். தாவரங்களையும், விலங்குகளையும் இனப்பெருக்கம் செய்யும் நடைமுறைக்கு ஆதார வி'யங்களாக இந்த அறிவு நமக்குத் தேவைப்படுகிறது. நவீன இயந்திரங்களை உருவாக்குவதற்கு நமக்கு பூர்வீக விவசாயக் கருவிகள் எவ்வாறு உருவாகின என்பதைப் பற்றிய விவரம் தேவைப்படுகிறது.

தொல்பொருள் ஆய்வுத் துறையினருக்கும் வரலாற்றாசிரியர்களுக்கும், இயற்கைவாதிகளுக்கும் விவசாயத்துறை ஆய்வாளர்களுக்கும் மரபணுத்துறை ஆய்வாளர்களுக்கும் தாவரங்கள், விலங்குகள் இனப்பெருக்க ஆய்வாளருக்கும் இந்த ஆய்வு முடிவுகள் ஆர்வத்தைத் தூண்டக் கூடியவை.

முக்கிய அம்சம் என்னவெனில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களின் பூகோள ரீதியான இருப்பிடத்தை கண்டறிவதாகும். சாகுபடி தாவரங்கள், எடுத்துக்காட்டாக கோதுமை, பார்லி, அரிசி, சோளம் மற்றும் நிலங்களில் பயிரிடப்படும் பல காய்கறிப் பயிர்கள் ஆகியவற்றின் முதன்மையான மூல இருப்பிடங்களை உறுதிப்படுத்துவது எமது ஆய்வின் நோக்கம். சாகுபடித் தாவரங்கள் ஆரம்பமான ஆதாரப் பிரதேசங்களில்தான் இத்தாவரங்களின் வியத்தகு பன்முகப் பெருக்கமும் நிறைந்து கிடப்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. சிறிய, பூர்வீக விவசாயத்தை மேற்கொண்டுள்ள, ஐந்து லட்சம் எக்டேர் நிலங்களுக்கும் மேற்படாத அபிசினியாவில் மட்டும் உலகம் முழுமையும் ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டாலும் உள்ள தாவரங்களை விட அதிகமான தாவர இனங்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். சோளத்தின் ஆரம்ப தாயகமான தென் மெக்ஸிகோவில உள்ள சோள வகைகள் மிகுந்த தரம் உடையனவாக உள்ளன. ஐரோப்பிய மரங்களின் முதன்மையான தாயகமாக விளங்கும் டிரான்ஸ் காகசியாவில் உள்ள காட்டுப் பழங்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் வேறுபட்டுள்ளன. தாவர இனங்களின் பன்முகப் பெருக்கம் சாகுபடிக்கு வந்த ஒரு தாவரத்தின் முதலில் தோன்றிய இடத்தை எப்பொழுதும் அடையாளம் காட்டாது. அத்தாவரங்களின் காட்டுத் தன்மையையும் சாகுபடித் தன்மையையும் ஆராய்வதோடு தாவரத்தின் இடப்பெயர்ச்சி வரலாற்றையும் ஆராய வேண்டும்.

நூற்றுக்கணக்கான சாகுபடித் தாவரங்களை ஆராய்ந்தறிவதன் பயனாக, பிரதான சாகுபடித் தாவரங்களின் அடிப்படை உலக மையங்களைத் தீர்மானிப்பதில் வெற்றி கண்டுள்ளோம். பொதுவாக எமது ஆய்வுகள் பூமியின் அடிப்படையான முக்கிய சாகுபடி பயிர்களின் ஏழு மையங்களைக் கண்டுபிடித்து நிறுவியுள்ளதோடு, அவைதான் பெரும்பாலும் சுயேச்சையான உலக விவசாய மையங்கள் என்பதையும் நிறுவியுள்ளது.

பெரும்பான்மையான சாகுபடித் தாவரங்களின் முக்கிய கண்டம் ஆசியாவாகும். பெரும்பான்மை எண்ணிக்கையிலான சாகுபடித் தாவரங்கள் ஆசியாவிலிருந்து தோன்றியனவாகும். ஆசியாவில் தாவர இனங்கள் உருவாகிய மூன்று அடிப்படை மையங்கள் உள்ளன. முதன்மை மற்றும் முன்னணி மையம், உட்பகுதி ஆசியா மைனர் உள்ளிட்ட தென்மேற்கு ஆசியா, பெரியா, ஆப்கானிஸ்தான், துருக்கிஸ்தான் மற்றும் தென்மேற்கு இந்தியா அடங்கிய பகுதியாகும். இதுதான் மென்மையான கோதுமை, ரை, ஆளிவிதை, அல்பல்பா, பெர்ரியன் கால்நடைத் தீவனப்புல், பெரும்பான்மையான ஐரோப்பிய பழ மரங்கள் (ஆப்பிள், பேரி இனக்காய், புரூனஸ் டைனரி கட்டா, மாதுளம் பழம், குயின்ஸ், இனிப்பு செரி) திராட்சை மற்றும் பல காய்கறி வகைகளின் தாயகமாகும். இந்த பிராந்தியத்தில் தான் ஆரம்ப சொர்க்கமான ஈடன் தோட்டம் இருந்தது என்று விவிலிய வரலாறு கூறுகிறது. டிரான்ஸ் காகசியாவிலும் வடக்கு பெர்ரியாவிலும் இப்பொழுதும் காட்டு ஆப்பிள்கள், பேரிக்காய்கள், இனிப்புச் செரிகள், குயின்ஸஸ், காட்டுத் திராட்சை ஆகியவற்றின் சொர்க்கம் என்று வர்ணிக்கப்படும் வார்த்தைகளின் முழுப் பொருளில் அமைந்துள்ள காடுகளைக் காணலாம்.

ஆசியாவின் இரண்டாவது தனித்தன்மையான உலகமையம் கங்கைச் சமவெளியை உள்ளடக்கிய இந்தியாவும் தென்னிந்திய தீபகற்பமும், அருகாமையிலுள்ள இந்தோசினா, இஸ்லாம் உள்ளிட்ட பகுதிகளும் ஆகும். இதுதான் இன்றைக்கும் மனித குலத்தின் செம்பாதி பகுதிக்கு உணவுப் பொருளாக இருக்கும் அரிசியின் பிறப்பிடமாகும். பூர்வீக நிலையில் நிலங்களில் பயிரிடப்படுவதையும் வியக்கத் தகுந்த அதன் பன்முகப் பெருக்கத்தையும் இங்கே காணலாம். இதுதான் பல வெப்ப மண்டல சாகுபடித் தாவரங்களின் தாயகமாகும். கரும்பு, ஆசியப் பருத்தி, மாமரம் போன்ற வெப்ப மண்டலப் பழ மரங்கள் ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்குகிறது.

மூன்றாவது ஆசிய மையம் கிழக்கு மற்றும் மத்திய மலைப்பகுதி சினாவாகும். மத்திய ஆசியா மிகுந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும் ஐயத்திற்கிடமின்றி பூர்வீக விவசாயத்தோடு எவ்விதத் தொடர்பும் இல்லாத பகுதியாகும். மங்கோலியாவோ, மேற்கு சினாவோ அல்லது டிரான்ஸ்கான் அல்லது சைபீரியாவோ தனித் தன்மை பெற்ற விவசாயத்தோடோ அல்லது பயிர்களின் பன்முகப் பெருக்கத்தோடோ அல்லது விவசாய உத்திகளோடோ எவ்விதத் தொடர்பும் இல்லாத பகுதிகளாகும்.

மாறாக கிழக்கு ஆசியா சினத்தின் மகா நதிகளாகிய ஹீன் ஹோ மற்றும் யாங்ட்ஸே - கியாங் ஆகியவை பாய்கின்ற மேல் சமவெளிப் பகுதி சின நாகரிகத்திற்கும் ஆரம்ப சின விவசாயத்திற்கும் பிறப்பிடமாகும். இப்பகுதி பிரத்தியேகமான சின முட்டைக் கோஸ், முள்ளங்கி, மற்றும் ஐரோப்பாவில் சினத் தாவரங்கள் ஆகியவற்றின் தாயகமாகும். நார்த்தை, எலுமிச்சை, கிச்சிலி, உணாபி, ஈச்சம்பழம், பீச், சின பிளம்ஸ் தேயிலை மல்பெரி மற்றும் வெப்ப மண்டல மித வெப்ப மண்டலத் தாவரங்களின் தாயகமாக இப்பகுதி விளங்குகிறது.

இப்பகுதியில் விவசாய உத்திகள் பிரத்தியேகமானவை. கைகளின் உழைப்பால் இங்கு மண் பண்படுத்தப்படுகிறது. விவசாய விலங்குகள் அபூர்வமாகப் பயன்படுத்தப்படுகின்றன. தீவிர காய்கறி சாகுபடி பரவலாக நடைபெறுகிறது. சினாவில் பருவக் காற்றுகளால் மழை பெய்கிறது. முதன்மையான விவசாயப் பகுதிகள் தேவையான அளவு ஈரப்பதத்தைப் பெறுகின்றன. ஜப்பானும் பார்மோசாவும் சினாவிலிருந்து தான் பயிர்களையும் விவசாய உத்திகளையும் கடன் வாங்கியுள்ளன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பிலிப்பைன்ஸ் மற்றும் மலேயாத் தீவுகள் சினாவிலிருந்த விவசாயத்தை பெற்றுக் கொண்டன.

நான்காவது உலக மையம் மத்திய தரைக்கடல் பகுதிக்குப் பக்கமுள்ள



பைரேனியன், அப்பினைன் மற்றும் பால்கன் தீபகற்பம், ஆசியா மைனர் பகுதியின் கடலோரப் பகுதிகள், அல்ஜீரியா, டுனீசியா, சிரியா மற்றும் பாலஸ்தீனப் பகுதிகளாகும். பழமை வாய்ந்த நாகரிகங்களான எகிப்து, எட்ருஸ்கான், ஏஜியன் தொன்மை வாய்ந்த ஹீப்ரு ஆகிய உயர் நாகரிகங்கள் தோன்றிய முக்கிய வரலாற்று பண்பாட்டுச் சிறப்பு மிக்க பகுதியாக மத்திய தரைக்கடல் பகுதி இருந்த போதிலும் வேறுபட்ட பன்முகப் பெருக்கம் வாய்ந்த தாவரங்கள் கொண்ட மையமாக விளங்கி வந்தது. பண்டைய விவசாயம் இப்பகுதியில் ஆலிஸ், கழற்றி, மயிற் கொன்றை, அத்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. கோதுமை, பார்லி, பீன்ஸ், மொச்சை ஆகிய பயிர்கள் பிற மையங்களிலிருந்து பெறப்பட்டன. இப்பயிர்களைப் பொறுத்தவரை வேறுபட்ட பன்முகப் பெருக்கம், இப்பயிர்கள் சம்பந்தப்பட்ட முக்கிய மையங்களில் இருப்பதை விட மிகவும் குறைந்த அளவில் இருந்தன. தீவனப் பயிர்களான ஹெடி சபர்ம், காரனேரியம், எர்வும், எர்வில்லா, கால்நடைத் தீவனமான பட்டாணி இனச்செடிகள், லாத்திரஸ் சிசர், எல்கார்கோனியோ, டிரியோலியம் அலெக்ஸாண்டிரினம் ஆகியவை மத்திய தரைக்கடல் பகுதியில் தோன்றிய தாவரங்களாகும்.

மிதமான சிதோ'ணத்திலும் உயர் பண்பாடு மிக்க மக்கள் தொகையாலும் சாகுபடிச் பயிர்கள் எச்சரிக்கையான வழியில் தேர்ந்தெடுக்கப்பட்டன. தானிய வகைகள், பயிற்றினம் சார்ந்த பயிர்கள், ஆளிவிதை, காய்கறிச் செடிகள் ஆகியவை மத்திய தரைக்கடல் பகுதியில் முக்கியமானவை. இவை இப்பகுதியில் அசாதாரணப் பருமனுள்ள பழங்களையும், கொட்டைகளையும் தண்டுகளையும் கொண்டிருப்பதோடு இதே பயிர்கள் நடுக்கடல் பகுதிக்கு அப்பால் உள்ள பகுதிகளின் விளைச்சலோடு ஒப்பிடும்போது சிறந்த தரம் உடையனவாகவும் உள்ளன.

நடுக்கடல் பகுதி ஆரம்ப கால விவசாயம் அங்கு பயன்படுத்தப்பட்ட உழவுக் கருவிகள், அறுவடைக் கருவிகள், ஆகியவற்றால் சிறப்புடையதாகும். ரோமானிய உழவுசால் கலப்பை கூர்மையான கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட சூட்டடிப்புக் கருவி, கல் உருளை ஆகியவை இக்கருவிகளில் அடங்கும். சினா, இந்தியா, தென்மேற்கு ஆசியா ஆகியவை இக்கருவிகளை அறிந்திருக்கவில்லை.

ஐந்தாவது மையம் மலைப்பகுதி கிழக்கு ஆப்பிரிக்கா, குறிப்பாக மலைப்பகுதி அபிசினியா ஆகும். இந்த சிறிய மையம் மிகவும் பிரத்தியேகமானது ஒரு சிறிய எண்ணிக்கையிலான தனித்தன்மை பெற்ற சாகுபடித் தாவரங்கள் அசாதாரண ரகங்களைக் கொண்டு விளங்குகின்றன. இங்கேதான் உலகின் அதிகமான பன்முகப் பெருக்கத்தை காண முடிகின்றது. அதுவும் கோதுமை, பார்லி, சோளம் ஆகியவற்றில் பல்வேறுப்பட்ட ரகங்களைக் காணலாம். அபிசினியா தான் காப்பி தாவரத்தின் பிறப்பிடமாகும். அதைப் போன்றே பீருக்காக புளிக்க வைக்கப்படும் பார்லியின் தாயகமும் அதுவே.

அபிசினிய மையத்தின் பழமையைச் சுட்டிக்காட்டும் தொல்பொருள் நினைவிடங்கள் ஏதும் இல்லையென்றாலும் தாவரங்களின் பன்முகத் தன்மைகளாலும் சிறப்புக் குணங்களாலும், விவசாய உத்திகளாலும் (மண்வெட்டிகளால் நிலத்தைப் பண்படுத்தும் முறை இன்று ஓரளவு அபிசினியாவில் இருந்து வருகிறது) இந்த மையம் ஐயத்திற்கிடமின்றி தனித்தன்மை வாய்ந்ததும் பழைமை வாய்ந்ததுமாகும். எகிப்து நாடு குறிப்பிடத் தக்க அளவிற்கு அபிசினியாலிருந்து மகசூல் தாவரங்களை கடன் வாங்கியுள்ளது. சாகுபடிப் பயிர்களின் பன்முகத் தன்மை, வீட்டுப் பிராணிகளின் வகைகள், விவசாய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கைமுறை, அவர்களின் மூல உணவு இவற்றை எல்லாம் ஒப்பிட்டு ஆய்வு செய்யும்போது, இவை அனைத்தும் அபிசினிய மையத்தின் சுயத்தன்மையை சுட்டிக்காட்டுவதாக உள்ளன. மொழியியல் புள்ளிவிவரங்களும் இதை உறுதி செய்வனவாக உள்ளன.

ஆறாவது மையம், மத்திய அமெரிக்கா உள்ளிட்ட தெற்கு மெக்ஸிகோ மையம் ஏழாவது பொலிவியா உள்ளிட்ட பெருவியன் மையம், ஆறாவது மையம் மிகவும் முக்கியமானது இங்கு மக்காச்சோளம், பருத்தி, கொக்கோ, அகேல் பென்னகுயன், மணமிக்க பூசணிக்காய், கொத்தான மலர்களைக் கொண்டதும் பொதுவானதுமான பீன்ஸ், சியாட்டோ (செசினம்), பப்பாளி மற்றும் அதிக முக்கியமில்லா அநேக உள்ளூர் பயிர்கள் ஆகியவை பயிராகின்றன.

பெருவும் பொலிவியாவும் உருளைக் கிழங்கு சின்கோனா மரம், கொக்கோ, மற்றும் இரண்டாம் தரமான பல்வேறு பயிர்களின் தாயகமாகும். இங்கு அசாதாரணமான, ஒவ்வொன்றும் மாறுபட்ட தன்மை வாய்ந்த, மிருதுவான மக்காச் சோள வகைகளைக் காணலாம்.

தெற்கு, மத்திய அமெரிக்கப் பகுதிகளைப் பொறுத்தவரை சில பயிர்களை சாகுபடிக்குக் கொண்டு வந்திருந்தாலும் உலக விவசாய வரலாற்றில் முக்கியத்துவம் எதையும் வகிக்கவில்லை.

இவ்வாறு மேலே சொல்லப்பட்ட ஏழுமையங்களே உலகத்தின் மொத்த விவசாயத்தை உருவாக்கிய மையங்களாகும். பயன்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகளின் வேறுபாடு, முதன்மையாக தோற்றுவிக்கப்பட்ட சாகுபடித் தாவரங்களின் வேறுபாடுகளோடு சம்பந்தமுடையதாகும்.

ஏழு மையங்களும் வெப்ப மண்டல, மித வெப்ப மண்டல மலைப் பிராந்தியங்களிலேயே அடங்கியுள்ளன. விவசாயத்தின் உலகமையங்கள் வெப்ப மண்டல பகுதியில் அடங்கியுள்ளது. அதைப் போலவே ஆதி விவசாய உலக மையங்களும் இமயமலை, ஹிந்துகுஷ் மலைப்பகுதி, ஆப்பிரிக்கா, மலைப்பகுதி மத்திய தரைக்கடல் நாடுகள், மலைப்பகுதி சினா ஆகியவற்றில் அடங்கியுள்ளன.

வெப்பமண்டல, மித வெப்பமண்டலப் பகுதிகள் தாவர வகைகள் உருவாவதற்கும் தொடர்ச்சியாகப் பெருகுவதற்கும் தேவையான சாதகமான இயல்புகளைக் கொண்டிருந்தன. காட்டுத் தாவரங்களின் அதிகபட்ச பன்முகப் பெருக்கம் நிச்சயமாக வெப்ப மண்டலப் பகுதிகளை நோக்கியே நம்மை ஈர்க்கிறது. வட அமெரிக்காவில் இது தெளிவாகத் தெரியும். தென் மெச்சிகோவையும் மத்திய அமெரிக்காவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைவான அளவு பரப்பினைக் கொண்டிருந்தாலும் கனடா, அலாஸ்கா, ஐக்கிய அமெரிக்கா (கலிபோர்னியா உட்பட) ஒன்றாகச் சேர்த்தாலும் கொண்டிருக்கும் தாவர இனங்களைவிட அதிகமான தாவர இனங்களைக் கொண்டு விளங்குகின்றன. கோஸ்டாரிகா, சால்வடார் குடியரசுகள் போன்ற சிறிய நாடுகள் கூட நூறு மடங்கு பெரிதான அமெரிக்க நாடுகளுக்கு இணையான தாவர இனங்களைக் கொண்டு விளங்குகின்றன. தாவர இனங்களின் சக்திமிக்க தொடர்ச்சியான தோற்றுவாய்கள் முதன்மையாக புதிய உலகின் ஈரப்பதமிக்க வெப்பமண்டலப் பகுதியிலேயே உருவாகின.

மத்திய தரைக்கடல் நாடுகளில் தாவர இனங்கள் செழித்து விளங்கின. பால்கன் தீபகற்பம், ஆசியாமைனர், சிரியா, பாலஸ்தீனம், அல்ஜீரியா மொராக்கோ ஆகிய நாடுகள் தாவர இனங்களின் பல்வகைப் பெருக்கத்தில் சிறந்து விளங்கின. (சராசரி 4000 முதல் 6000 இனங்கள் வரை) இவ்வகையில் வடக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவை விஞ்சும் வகையில் வளர்ச்சி பெற்றிருந்தன. இந்தியாவைப் பொறுத்தவரை 14500க்கும் குறையாத தாவர இனங்கள் உள்ளன. மத்திய மற்றும் கிழக்கு சினாவில் மொத்த தாவரங்களைப் பொறுத்தவரை அசாதாரணமான பன்முகத் தன்மையைக் கொண்டிருந்தன.

மலைப் பகுதிகளில், நிலவியுள்ள வேறுபட்ட தட்பவெப்பநிலை, மண்வகை ஆகியவைகள் முக்கிய சாகுபடி தாவரங்கள் உருவாவதற்கும் தாவரங்களின் பன்முகத் தன்மை பெருகுவதற்கும் தாவர இனங்களில் செடி, கொடிகள் உண்டாவதற்கும் உறுதுணையாக உள்ளன. மற்றொருபுறம் முந்தைய சகாப்பதத்தில் வட ஐரோப்பாவையும் வட அமெரிக்காவையும் சைபீரியாவையும் மூடியிருந்த பனிக்கட்டிகள் ஒட்டுமொத்த தாவர வகைகளை அழித்துவிட்டன.

ஈரப்பதமுள்ள மித வெப்ப மண்டலப் பகுதிகள் பிர-தானமாக மரங்கள் வளர்வதற்கு சாதகமாக இருந்தன. வெப்ப மண்டல, மிதவெப்ப மண்டல மலைப் பிராந்தியங்கள் பூர்வீக விவசாயிகள் நிரந்தர குடியிருப்புகளை அமைக்கவும் பூமியின் பெரும்பான்மை செடிகொடிகள் அடங்கும் தண்டுத் தாவரங்கள் உருவாகவும் உரிய சூழலைக் கொண்டிருந்தன.

வெப்ப மண்டல மித வெப்ப மண்டலப் பகுதிகள் மனிதன் நிலைத்த குடியிருப்புகளை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான இயல்புகளைக் கொண்டிருந்தன. ஆதிவாசி ஈரப்பதமுள்ள வெப்பமண்டலக் காடுகளைப் பார்த்து அச்சம் கொண்டான் அதன் மிதமிஞ்சிய தழை அடர்த்தியும் வெப்பமண்டல நோய்களும் அவனை அச்சுறுத்தியது. தன்னுடைய நிலைத்த குடியிருப்புக்கான இடத்தை மனிதன் தொடர்ந்து தேடிக் கொண்டிருந்தான் வெப்ப மண்டலக் காடுகளின் எல்லை வரை திரிந்தான். வெப்ப மண்டல, மிதவெப்பமண்டல மலைப் பிராந்தியங்கள்தான் முதன் முதலில் குடியிருப்புகளை உருவாக்கியவர்களுக்கு இதமான சூழலை போதுமான உணவினை அளித்தது.

சிறிய கூட்டங்களாக மனிதர்கள் வாழ்வதை மலைப் பிரிவுகள் சாதகமாக்கியது. இந்த நிலையிலிருந்துதான் மனித சமூக வளர்ச்சி தொடங்குகிறது. கீழ், மத்திய நைல் நதிப் பள்ளத்தாக்குகள், யூப்ரடீஸ், டிக்ரிஸ், சிந்து நதிப் பள்ளத்தாக்குகளை வெற்றி கொண்டு மனித சமூகம் வாழ்ந்து மனித சமுதாய வளர்ச்சியில் பிந்தைய காலகட்டத்தில் ஏற்பட்டதா கும்.



பூர்வீக மனிதன், பூர்வீக விவசாயி முக்கியத்துவம் இல்லாத வகையில் தனித் தனி தொடர்பில் லாத குழுக்களாக வாழ்ந்து வந்தான். அவனுக்கு வெப்பமண்டல மித வெப்பமண்டலப் பிர தேசங்கள் விதி விலக்கான வகையில் வாழ்வதற்கான சாதக நிலைகளை உருவாக்கின.

பண்டைக் காலத்தைப் பற்றிய ஆய்வுகள் பூர்வீக விவசாயத்தில் நீர்ப்பாசன முறை இல்லாததைத் தெரிவிக்கின்றன. எகிப்து, மெசப்படோமியா, பெருநாட்டின் பாசனப் பகுதிகள் (கடல் மட்டத்திற்கு 11000 அடிக்கு மேல்) ஆகிய இடங்களில் பயிரிடப்படும் தாவரங்களின் பன்முகப் பெருக்க ஆய்வு சுட்டிக்காட்டுவது என்னவெனில் இங்கு பயிரிடப்படும் தாவரங்கள் வேறு இடங்களிலிருந்து கடன் வாங்கப்பட்டவை என்பதாகும். மாறுபாட்டிற்கிடமின்றி அபிசினியா, மலைப்பகுதி மெச்சிகோ, மத்திய அமெரிக்கா, உயர்ந்த மலைப் பிராந்திய பெரு (11000 அடிக்கு மேல்) சினா, இந்தியா மற்றும் மத்திய தரைக் கடல் பகுதிகள் ஆகியவற்றில் சாகுபடி செய்யப்பட்ட பயிர்களுக்கு ஆதியில் நீர்ப்பாசனம் பயன்படுத்தப்படவில்லை.

தாவரம் அதன் உடனிருக்கும் களைகளால் இடம்பி டிக்கப்பட்டு அகற்றப்படுவதும் உண்டு களை வளர்ந் தால் பயிர் அழியும். குளிர்கால கோதுமை, அதன் முக்கியமான இடமாகிய தென்மேற்கு ஆசியாவிலிருந்து வடக்கு நோக்கிப் பரவும்போது ஆசியாவிலும் ஐரோப்பா விலும் அதன் கடுமையான களையாகிய குளிர்கால தாவரத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு அகற்றப்பட்டது. இவ் வாறுதான் பார்லியும் குறைந்த தரமுடைய மண் மற்றும் பருவ காலத்தால் ஓட்ஸ் களையால் பாதிக்கப்பட்டு அகற்றப்பட்டது.

மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியின் முதல் கட்டத்தை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு இந்த விவரங்கள் மிகவும் அவசியமான ஒன்றாகும். மனித குலத்தின் முதலாவது நிரந்தரக் குடியேற்றத்தை உண்டாக்கியவர்களின் ஒரு முக்கிய அம்சம் இயற்கை உணவு மூலாதாரங்களை பகிர்ந்த கொண்டதாகவே இருக்க வேண்டும்.

விவசாயத் தோற்றம் சம்பந்தமான பிரச்சினையை இயக்கவியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத் திலிருந்து அணுகும் போது நாம் நமது பழைய கருத்தோட்டங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற நிலைமைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளோம். இதன் மூலமே சாகுபடி செய்யப்படும் தாவரங்கள் மற்றும் வீட்டு வளர்ப்புப் பிராணிகள் ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியையும் அவற்றின் வரலாற்று வளர்ச்சிப் போக்கையும் கண்டறிய இயலும்.

நன்றி: சமூக விஞ்ஞானம்

## எம்.வி - சன்.ஸீ கப்பல் சென்ற

# 35 பேரின் புகலிடக் கோரிக்கை கனடாவினால் நிராகரிக்கப்பட்டது

எம்.வி.சன் ஸீ கப்பலில் கனடாவின் மேற்குக் கரையை சென்றடைந்த புகலிடம்கோரும் 492 பேரில் 20 பேரின் புகலிடக் கோரிக்கை மாத்திரம் ஏற்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்கள் கழிந்த நிலையிலேயே இருபது பேரின் புகலிடக் கோரிக்கை மாத்திரம் ஏற்கப்பட்டுள்ளது. புகலிடக் கோரிக்கையாளர்களில் மேலும் 35 பேரின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுடன், 2 பேர் கனடாவிலிருந்து திருப்பியனுப்பப் பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 414 குடிவரவாளர்களும் தமது தலைவிதி என்னவாகுமென அறிய ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர். இவர்களில் 6 பேருக்கு எதிராக மனிதக் கடத்தல் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

கனடா நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசனின் கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்படி விவரங்களை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சபையில் சமர்ப்பித்தார். கடந்த ஜூன் மாதம் தொடக்கம் கனடாவின் குடிவரவுச் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன.

கடத்தல்காரர்களுடன் கனடாவுக்குள் வந்து புகலிடம் கோருவோரின் விண்ணப்பங்கள் மிகதாமதமாகவே பரிசீலனை செய்யப்படுகின்றன. இச்சட்டம் உண்மையான புகலிடக்கோரிக் கையாளர்களையும் தண்டிப்பதாக சில அமைப்புக்கள் விமர்சித்துள்ளன.



## குண்டு வெடித்து சிறுவன் காயம்

அக்கரைப்பற்று, கண்ணகிபுரம் பகுதியில் மோட்டார்குண்டு ஒன்று வெடித்ததில் 14 வயது சிறுவன் ஒருவன் படுகாமயடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில், ரவிக்குமார் கௌரிகரன் என்ற பாடசாலை மாணவனே காயடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சிறுவன், கண்ணகிபுரம் பகுதியில் மூடப்பட்ட விசேட அதிரடிப்படை முகாம் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவ்விடத்தில் போத்தல் ஒன்று கிடப்பதை கண்ட அச்சிறுவன் அதனை எடுத்து எறிவதற்கு முயற்சித்துள்ளார். அதன் போதே இந்தச் வெடிப்பு சம்பவம் ஏற்பட்டுள்ளது.

போத்தலில் அடைக்கப்பட்ட நிலையிலிருந்த டொம்பா 4 ரக மோட்டார் குண்டே இதன்போது வெடித்துள்ளதாகவும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அக்கரைப்பற்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இலங்கைப் பெண்ணை மணம் முடிப்பதற்காக பதவியைத் துறந்த இந்திய இராணுவ அதிகாரி

### இராஜினாமாவை ஏற்கமறுத்ததால் வழக்குத் தாக்கல்

இலங்கைப் பெண்ணொருவரை திருமணம் செய்வதற்காக தனது இராணுவ பதவியை இராஜினாமா செய்ய முற்பட்ட இந்திய இராணுவத்தின் மேஜர் பதவிநிலை வகிக்கும் அதிகாரி ஒருவரின் இராஜினாமா கடிதத்தை இராணுவம் ஏற்க மறுத்ததை அடுத்து அவர் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்திய இராணுவத்தின் சமிக்ஞை படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் விகாஸ் குமார் என்பவரே இந்த வழக்கைத் தாக்கல் செய்தவராவார்.

இராணுவ சமிக்ஞை படைப்பிரிவில் அதிகாரிகளுக்கு தட்டுப்பாடு இருப்பதாலும் இலங்கைப் பெண்ணுடன் இவருக்கு உள்ள தொடர்பு பற்றி விசாரணை நடத்த வேண்டியிருப்பதாலுமே அவரது இராஜினாமாவை ஏற்க முடியாதுள்ளது என இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

இருப்பினும், விகாஸ் குமாரின் இராஜினாமாவை இராணுவம் மறுக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்நிலையில், இந்தத் தீர்ப்பினை எதிர்த்து இந்திய இராணுவம் மேன்முறையீடு செய்துள்ளது. மேஜர் விகாஸ் குமாரின் காதலியான இலங்கைப் பெண் அனிலா ரணமாலி குணரத்ன, பெங்களூரில் முதுமாணிப் பட்டக் கற்கை நெறியொன்றை மேற்கொண்டு வருகின்றார். இந்நிலையில், இவர்கள் இருவரும் கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திருமணம் செய்யவிருந்தனர்.

இந்திய இராணுவச் சட்டப்படி, வெளிநாட்டுப் பிரஜையொருவரை இந்திய இராணுவத்தில் உள்ள ஒருவர் திருமணம் செய்ய முடியாது. இதனாலேயே விகாஸ் குமார், தனது பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்தார் என்று இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

## தமிழ்க் கூட்டமைப்பு இல்லாமல் தமிழர்களுக்கான தீர்வு சாத்தியப்படாது

### அரியநேத்திரன் எம்.பி.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசாவிட்டாலும் தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்குவோம் என அரசாங்கம் கூறி வருகின்றது. அப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசாது, எம்மை ஒதுக்கி விட்டு தீர்வு கொடுப்பது என்பது மணமகள் இல்லாத திருமணம் போன்றுதான் இருக்கும். அரசோடு பேசுவதற்கு நாம் இப்போதும் தயாராகவே உள்ளோம். ஆனால் அரசுதான் எம்மை பேச்சுக்கு அழைக்காமல் உள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாவிட்டாலும் வழங்குவோம் என அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களும், அரசும் கூறி வருவது தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே அவர் அவ்வாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமேயுள்ளது. இதனை தமிழ் மக்கள் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களிலும் பல்வேறு செயற்பாடுகள் மூலமும் நிரூபித்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒதுக்கி விட்டு தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்க முடியாது என்றார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.



அமெரிக்கா, நியூயோர்க் தமிழ்ச் சங்கத்தின் 35 ஆவது வருட நிறைவு தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாகக் கலந்து கொள்வதற்காகவே அவர் அமெரிக்கா சென்றுள்ளார்.

## இலங்கையில் ஓமான் வெளிவிவகார அமைச்சர்

ஓமானின் வெளிவிவகார அமைச்சர் பின் அலவ் பின் அப்துல்லா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை இலங்கைக்கு வந்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் அழைப்பின் பேரில் ஓமான் வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் இரவு இலங்கை வந்தடைந்துள்ளார். நேற்யைதினம் ஓமான் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கு இடையில் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்ளவென உடன்படிக்கை ஒன்றும் கைச்சாத்தி டப்படவுள்ளது. ஓமான் வெளிவிவகார அமைச்சர் தனது இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

## சீரற்ற காலநிலையால் நாட்டில் 13,076 குடும்பங்கள் பாதிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள மண்சரிவு மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக இதுவரை 13074 குடும்பங்களைச் சேர்ந்த 49788 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் முலட்டியான மற்றும் கோப்பாய் பகுதிகளில் இரு உயிரிழப்புக்களும் பதிவாகியுள்ளதென அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மண்சரிவு, வெள்ள அனர்த்தத்தால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5583 குடும்பங்களைச் சேர்ந்த 19785 பேர் பாதிக்கப்படுள்ளதோடு 503 குடும்பங்களைச் சேர்ந்த 1721 பேர் 9 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் 34 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கேகாலை மாவட்டத்தில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் மாவட்டத்தில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்டி மாவட்டத்தில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 274 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் 1101 குடும்பங்களைச் சேர்ந்த 4626 பேர் பாதிக்கப்பட்டதோடு 39 வீடுகள் முற்றாகவும் 89 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்தன. பாதிக்கப்பட்ட 72 குடும்பங்களைச் சேர்ந்த 215 பேர் 7 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 214 குடும்பங்களைச் சேர்ந்த 853 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 10 குடும்பங்களைச் சேர்ந்த 55 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா மாவட்டம் வத்தளையில் 3453 குடும்பங்களைச் சேர்ந்த 15152 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 256 குடும்பங்களைச் சேர்ந்த 1234 பேர் 5 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னாரில் 469 குடும்பங்களைச் சேர்ந்த 1836 பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு யாழ்ப்பா ணத்தில் 2164 குடும்பங்களைச் சேர்ந்த 7107 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காற்று காரணமாக 18 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 350 வீடுகள் பகுதி அளிவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 298 குடும்பங்களைச் சேர்ந்த 1186 பேர் 2 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| முல்லைத்தீவில் | - 5586 |
| யாழ்ப்பாணத்தில் | - 2164 |
| மன்னாரில் | - 1836 |
| கம்பஹாவில் | - 3453 |
| திருமலையில் | - 1109 |
| நுவரெலியாவில் | - 34 |
| கேகாலையில் | - 06 |
| குருநாகலில் | - 03 |
| கண்டியில் | - 02 |
| கொழும்பில் | - 09 |
| கிளிநொச்சியில் | - 214 |

# சமூக வானொலியின் பண்புக் கூறுகள்

- எம்.சீ.ரஸ்மின்



(கடந்த வாரத் தொடர்ச்சி)

**சமூக வானொலியொன்றில் மக்களின் பங்கேற்பு**

சமூக வானொலியொன்றில் தலைமைத்துவத்தினை (பணிப்பாளர் சபை, அல்லது நம்பிக்கை நிர்வாக சபை) தெரிவு செய்தல், நிலையத்திற்கான கொள்கையாக்கம், நிலையத்தின் முகாமைத்துவம், நிகழ்ச்சிகளின் வகை, நிபந்தனைகளை வடிவமைத்தல், நிகழ்ச்சிகளைத் தயாரித்தல், நிலையத்தின் வெளிவாரி பிரதிநிதித்துவம் ஆகிய விடங்களில் மக்கள் பங்கெடுப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

மக்களின் அபிப்பிராயங்களை, விருப்பு வெறுப்புகளைப் பிரதி பலித்தல் மக்களின் குற்றச்சாட்டுக்களை எடுத்துச் சொல்லல், உள்ளூர் அரசியல், நிர்வாகம் உள்ளிட்ட செயற்பாடுகள் குறித்து மக்களின் ஏற்புடமை என்பவற்றை சமூக வானொலி பல்வேறு விடங்களில் வெளிப்படுத்த முடியும். இதில் பக்கச்சார்பு என்பது சற்றும் இருக்க முடியாது. சமூக வானொலி பல்வேறு விடயங்களில் வெளிப்படுத்த முடியும். இதில் பக்கச்சார்பு என்பது சற்றும் இருக்க முடியாது. சமூக வானொலி என்பது ஒரு தனிப்பட்டவரின், தனிப்பட்ட குழுவின், தனிப்பட்ட சக்தி ஒன்றின் இருப்பில் நிபந்தனையற்ற முறையில் மக்கள் அபிப்பிரயாத்தைப் பிரதி பலிக்காது. மக்கள் சிந்திப்பதை, மக்கள் பேசுவதை உள் ளது உள்ளபடி அது பிரதிபலிக்கின்ற போது நேரடியாவோ மறைமுகமாவோ தீர்மானம் எடுப்பது மக்கள் இடம் பிடிக்கிறார்கள். இச்செயற்பாட்டையே தீர்மானம் எடுப்பதால் பங்கேற்றல் என்பது குறிக்கிறது.

Tabing, தனது how to Radio என்னும் கட்டுரையில் சமூக வானொலியில் மக்கள் பங்கேற்புத் திட்டமிடுதல், தொடக்கம், அமுலாக்கம், மதிப்பிடல் என்பவற்றின், ஒவ்வொரு கட்டங்களிலும் அனுமதிக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரல், நிகழ்ச்சிக்கான காற்றலை நேரம், உள்ளடக்கம் என்பன தொடர்பான தீர்மானங்களை எடுப்பதிலும் மக்கள் பங்கேற்க முடியும். மக்கள் மாத்திமின்றி அவர்களது பிரதிநிதிகளும் முகாமைத்துவம், நிதி என்பவற்றில் அங்கம் வகிக்கிறார்கள் எனக் கூறுகிறார்.

ஒவ்வொரு சமூக வனொலியும் சமூகம் ஒன்றின் வலுவாக்கத்திற்குத் துணைபுரிவதில் பொதுவான தரிசனத்தைக் (Mission) கொண்டிருக்கின்றன. சமூக வானொலியின் சகல கட்டங்களிலும் குறிப்பாக நிகழ்ச்சிகளை வழங்குதல், நிலையத்தை இயக்குதல், முதலிடுதல் என ஒவ்வொரு காலகட்டங்களிலும் பங்கேற்கக்கூடிய பொதுவான உத்தி முறைகள் சில இருக்கின்றன. பங்கேற்றல், தயாரிப்பு முறை மூலம் நிகழ்ச்சிகளைத் தயாரித்து மக்களின் பங்களிப்பினை உறுதிப்படுத்த முடியும். திறந் மற்றும் சுதந்திரமான கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்துவதன் வாயிலாகவும் பொது மன்றங்களின் ஒளிபரப்பினை மேற்கொள்வதன் வாயிலாகவோ நிறுவனங்களின் பங்களிப்புக்கு ஊக்கமும் உதவியும் வழங்க முடியும்.

**சமூக வானொலியும் நிலையான வருமானமும்**

சமூகத்தின் உறுப்பினர்கள் உருவாக்கிக் கொண்ட ஒரு நிறுவனம் என்ற வகையில் சமூக வானொலியின் இருப்பினை உறுதி செய்யும் பொறுப்பும் சமூதாயத்தையே சாரும். நடைமுறையில் நிலையான வருமானம் ஒன்றை ஏற்படுத்துவது சமூக வானொலிகள் எதிர்நோக்கம் சவால்களின் பிரதானமானதாகும்.

அனுமதிப்பத்திரத்தின் மூலம் வருமானம் ஈட்டும் முறை வெளிநாடுகளில் அமுலில் இருந்தாலும் இலங்கை போன்ற நாடுகளில் இதற்கான சூழ்நிலை இல்லை. பொதுவான நோக்கில் பார்க்குமிடத்து விளம்பரங்கள், காற்றலை நேரத்தினை வாடகைக்கு விடல், ஒளிப்பதிவு நிகழ்ச்சிகளை விற்பனை செய்தல், சாத்தியமான சந்தர்ப்பங்களில் அரச அறிவித்தல்களை ஒளிபரப்புதல் மற்றும் விளம்பரங்களை உள்வாங்கல் என்பன பொதுவான வருமான மூலங்களாகும்.

சமூக வானொலியை சமூக விருத்திக்கு துணை நிற்கும் சாதனம் என்ற வகையில் முறையாக பயன்படுத்தி மேற்குறிப்பிட்ட வழிகளில் வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம். இலங்கை போன்ற நாடுகளில் சமூக சேவை நிறுவனங்களுடன் தெளிவான ஒரு உடன்பாட்டுக்கு செல்வதன் வாயிலாக சமூக அபிவிருத்தி நிகழ்ச்சிடிகளை விளம்பரத்துக்காக தயாரித்து வழங்கலாம். ஆனால் நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட நிறுவனங்களில் நோக்கினைப் பிரதிபலிக்காதபடி அமைதல் வேண்டும்.

(மிகுதி அடுத்த வாரம்)

# வானொலியும் கலாரசனையும்

வானொலி அல்லது ஒலிபரப்பு இன்றைய உலகில் ஒரு பக்குவம் பெற்ற கலைச் சாதனமாகி விட்டது. சாதாரணமாக மற்றைய சாதனங்களால் வெளிப்படுத்தப் படும். கலையுருவங்களை, ஒலி வடிவால் மாத்திரம் அதுவும் வானொலி மூலம் வெளிப்படுத்துவதற்கு ஒரு பிரத்தியேகக் கலை உணர்ச்சியும் விசேஷப் பயிற்சியும் அனுபவமும் தேவை. ஒலிபரப்பு நிர்வாகிகளாயிருந்தாலும் சரி, ஒலிபரப்பும் பேச்சாளர் பாடகராகவும் நடிகராகவும் இருந்தாலும் சரி கலாரசனையைப் பற்றி பூரணமாக அறிந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒலிபரப்புச் சாதனத்தின் தனிப்பட்ட குணங்களையும் அதன் பிரத்தியேகப் பிரச்சினைகளையும் நன்றாகத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். எந்த நிகழ்ச்சியை ஒலிபரப்பினாலும் அதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது அந்த நிகழ்ச்சியில் நாம் காணும் பண்பல்ல, அதனைக் கேட்கும் நேயர்களிடம் அது எத்தகையை உணர்ச்சியை, எத்தகைய அனுபவத்தை எழுப்புகிறதென்பதை ஏற்கனவே ஊகித்துக்கொள்வது தான்.

**புலன் நுகர்ச்சியும் பயனும் ரஸாநுபவம் என்பது என்ன?**

அழகான ஒரு வர்ணச்சித்திரம் இருக்கிறது. அதனைப் பார்த்த மாத்திரத்தில் ஒரு ரசிகனின் கற்பனை கிளர்கிறது. அந்தக் கற்பனை உள்ளத்தில் எழும் போது ஏற்படும் அநுபவம்தான் ரசிகனின் பெருமிதத்துக்குக் காரணம். பெருமிதம் ஏற்படுவதற்கு உள்ளத்தில் ஒரு கிளர்ச்சி அல்லது தொழிற்பாடு நடைபெற வேண்டும் கட்புலனால் ஏற்பட்ட காட்சிக் குறி உள்ளத் தைத் தூண்ட, அதில் அவன் கற்பனை தொழிற்பட, அந்தத் தொழிற்பாடுதான் பெருமிதமாகிய அநுபவத்தைத் தருகிறது.

காட்சிப் புலனில் கற்பனையைத் தூண்ட வல்ல அம்சம் எதுவும் இல்லையானால் உள்ளக் கிளர்ச்சியும் அதன் வழிப் பெருமிதமும் ஏற்படாது. காட்சிப் பொருளிலே அழகு இல்லையென்றாகி விடும். அழகு இருந்தால்தான் ரசிக னின் கற்பனை அந்த அழகினால் தூண்டப்பட்டு, மேலும் புதிய புதிய அழகு அம்சங்களை வருவித்து உள்ளத்திலே ஒரு பெரிய கோலம் கிடைக்கும். இதன் விளைவாகப் பெருமித உணர்ச்சி தோன்றும். ரசிகன் ரசிக்கின்றான் என்று சொல்வோம்.

காட்சிப் புலன் மாத்திரம் அல்ல, ஐம்புலன்களுமே இந்தப் பெருமிதம் என்ற மெய்ப்பாட்டுக்கு ஆதாரமாயிருக்கின்றன. ஐம்புலன் நுகர்ச்சியால் நாம் பெறும் உணர்ச்சிகள் யாவும் உள்ளத்திலே கற்பனையைத் தூண்டி அது காரணமாக ஒரு தொழிற்பாடு நடைபெறச் செய்கின்றன. அந்தத் தொழிற்பாட்டின் விளைவுதான் பெருமிதம். நுண்கலைகளின் அந்தரங்கம் இதுவே. ரஸாநுபவம் என்பது இதுதான்.

**ஒலிபரப்புக் கலை இன்பம் கலையின் இந்த அடிப்படை**

உண்மையை அளவு கோலாக வைத்துக்கொண்டு பார்த்தால் ஒலிபரப்புக் கலையின் மர்மம் தெளிவாகும். வானொலி ஊடான ஒலிபரப்பு, செவிப்புலன் நுகர்ச்சி என்பதைக் கவனத்தில் வைத்துக் கொண்டால் தான் சிறந்த நிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும் அவற்றை அழகாக ஒலிபரப்பவும் வழிகளைக் கண்டுபிடிக்க முடியும்.

பேச்சு, நாடகம், இசை எல்லாம் வானொலிக்கு மூலம் பொருள்கள். இவற்றைக் கலை நிகழ்ச்சிகளாக உருவம் கொடுத்துச் சிருஷ்டித்து வழங்குபவர்கள் நிலைய நிர்வாகிகள். கேட்டு ரசிக்கவேண்டியவர்கள் பொது ஜனங்களாகிய நேயர்கள். அந்த நேயர்கள் உள்ளத்தில் கற்பனையைத் தாண்டி, அழகுச் சுவையை எழுப்பி, ரஸாநுபவத்தைப் பிறப்பிக்கும் நிகழ்ச்சியாக இருந்தால்தான் அந்த நிகழ்ச்சியில் கலைப் பண்பு இருக்கிறதென்று கருதமுடியும். அதுவே ஒலிபரப்புக் கலையின் நோக்கமும் பயனுமாகும். ஏதாவது ஒரு நிகழ்ச்சியைச் சிருஷ்டிப்பது சுலபம். ஆனால் ரஸாநுபவத்தை விளைவிக்கும் நிகழ்ச்சியாகச் சிருஷ்டிப்பதுதான் கடினம். அது கலையம்சம் தெரிந்தவர்கள் கையாலேயே முடியவல்லது. அது மாத்திரம் போதாது. ஒலி பரப்பப்படும் நிகழ்ச்சி நேயர்களி டத்தில் எத்தகைய விளைவைத் தூண்டவல்லது என்பதையும் உணரக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். நிகழ்ச்சியைக் கேட்கும் நேயர்கள்தாம் நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கு உரைகல்.

கலை வளர்ச்சிக்கும் அதன் விநியோகத்துக்கும் உகந்ததாயிருக்கும் வானொலி சாதனைத்தை வளப்படுத்தி முன்னேற்றமடையச் செய்பவர்கள் வானொலி நிலையத்து நிகழ்ச்சி நிர்வாகிகள் மாத்திரம் அல்ல.

அவர்களுக்குத் துணையாயிருக்கும் பேச்சாளர், எழுத்தாளர், பாடகர், நடிகர் முதலியோரும், நிகழ்ச்சிகளைக் கேட்டு ரசிக்கும் நேயர்களுமாகிய மூன்று பகுதியாரும் என்றே சொல்ல வேண்டும். ஆகையால் இம்மூன்று பிரிவினரும் ஒலிபரப்புக் கலையைப்பற்றி ஓரளவாவது தெரிந்து கொண்டிருத்தல் அவசியம். அத்துடன் கலாரசனை உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். கலையின் நுட்பங்களை அறிந்திருந்தால்தான் நிகழ்ச்சி தயாரிப்பவர்கள் சிறந்த முறையில் பேசலாம். எழுத்தாளர் தங்கள் சொல் ஓவியங்களைச் சிருஷ்டிக்கலாம். பாடகர் பாடலாம். நடிகர் நடிக்கலாம். நேயர்கள் கேட்டு நன்கு அனுபவிக்கலாம். அப்போதுதான் கலைவட்டம் பூரணமாகும்.

- சோ.சிவபாதசுந்தரம்
(ஒலிபரப்புக் கலை நூலிலிருந்து)

## இன்று முதல் புதிய அலைவரிசைகளில் பண்பலை வானொலி சேவை



இலங்கையில் பண்பலை ஊடாக இயங்கும் சகல தமிழ், சிங்கள ஆங்கில மொழியிலான வானொலி சேவைகளுக்கும் இன்று முதல் புதிய அலைவரிசைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தொலைத்தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இம் மாற்றம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதன் படி ஒவ்வொரு வானொலி சேவையும் நாடளாவிய ரீதியில் இரண்டு அலைவரிசைகளில் மட்டுமே ஒலிபரப்பை மேற்கொள்ள முடியும். நேயர்கள் இன்று முதல் பின்வரும் அலைவரிசைகளின் ஊடாக அந்தந்த வானொலி நிகழ்ச்சிகளை கேட்கக் கூடியதாக இருக்கும்.

| | |
|---|---|
| **90.1** | **யாழ்.எப்.எம்.** |
| **90.4, 90.6** | **வெற்றி எப்எம்** |
| **91.4** | **அலை எப்.எம்.** |
| **102.1,101.3** | **இலங்கை வானொலி தேசிய சேவை** |
| **102.6,102.8:** | **வசந்தம் எப்.எம்.** |
| **103.4,103.6:** | **சூரியன் எப்.எம்.** |
| **103.9,104.1:** | **சக்தி எப்.எம்** |
| **104.7,104.9:** | **இலங்கை வானொலி தென்றல்** |

## பி.பி.ஸி தமிழோசை அலைவரிசை மாற்றம்:


பி.பி.ஸி உலக சேவையிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழோசை நிகழ்ச்சிகள் இடம்பெற்று வரும் அலைவரிசைகள் அக்டோபர் 28 ஆம் திகதியிலிருந்து மாற்றம் பெற்றுள்ளன.

இதன்படி தினந்தோறும் இரவு மணி 9.15 முதல் 9.45 வரை சிற்றலை 25 மீற்றர் (11965 கிலோஹேட்ஸ்), 31 மீற்றர் (9855 கிலோஹேட்ஸ்), 41 மீற்றர் (7600 கிலோ ஹேட்ஸ்), 49 மீற்றர் (6135 கிலோஹேட்ஸ்) ஆகிய புதிய அலைவரிசைகளில் தமிழோசைகள் நிகழ்ச்சி கள் ஒலிபரப்பாகி வருகின்றன.

இந்த அலைவரிசை மாற்றம் 2013 மார்ச் 30 ஆம் திகதிவரை நடைமுறையிலிருக்கும் உள பி.பி.ஸி. தமிழோசை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தேசிய சேவை ஊடாக பண்பலை வரிசையில் தமிழோசை நிகழ்சிகளைக் கேட்டுவரும் நேயர்கள் எதுவித மாற்றமுமின்றி தொடர்ந்தும் அதே அலைவரிசையில் கேட்கமுடியும்.

புதுவிதை போடுமுன் அதை உழுது பண்படுத்த வேண்டுமென்றது. நிலம் சரிப்படுத்தியபின் பார்லியும் விதைக்கப்பட்டது. சற்றேறக்குறைய இந்தச் சமயத்தில் நடந்த ஒரு சம்பவம் மிகவும் அதிசயமானதாக இருந்தது. ஆனால் அதை எந்த மிருகத்தாலும் சரிவர அறிந்து கொள்ளத்தான் இயலவில்லை.
ஒருநாள் இரவு பன்னிரண்டு மணி சுமாருக்கு தடாலென்று துப்பாக்கி வேட்டு வெடித்தமாதிரி ஒரு சப்தம் கேட்டது. மிருகங்கள் எல்லாம் ஓடிச் சென்று பார்த்தன. நல்ல நிலா இருந்தது அன்றிரவு. பெரிய கொட்டகையின் கோடிச் சுவரில் ஏழு விதிகளும் எழுதப்பட்டிருந்த இடத்திற்கு நேர் கீழே ஒரு ஏணி விழுந்து இரண்டாக உடைந்திருந்தது. ஸ்க்வீலர் பேச்சுமூச்சற்று மயக்கமாகத் தரையிலே கிடந்தது.
ஒரு வாளியில் வெள்ளை வர்ணம் கொட்டியிருந்தது. ஒரு பெரிய பிரசும், ஒரு கைவிளக்கும் அதன் பக்கத்தில் கிடந்தன. நாய்கள் அங்கு ஸ்க்வீலரைக் காவல் காத்தன. அதனால் எழுந்து நடக்க முடிந்தவுடன், அவைகளே அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் போய்




விட்டன. மிருகங்களில் எதற்கும் இதற்கெல்லாம் என்ன அர்த்தம் என்று கண்டுகொள்ளமுடியவில்லை. கிழட்டு பெஞ்சமின் மட்டும் எல்லாவற்றையும் புரிந்து கொண்டது போலத் தலையை ஆட்டியது. ஆனால் அது ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இதற்குச் சில தினங்களுக்குப் பிறகு முரியல் அந்த ஏழு விதிகளையும் ஒருதரம் வாசித்துக் கொண்டிருந்தபோது, விதிகளில் ஒன்றின் வாக்கியம் கொஞ்சம் மாறியிருப்பது போல உணர்ந்தது. ஐந்தாவது விதியைப் பற்றி மிருகங்களுக்கு ஞாபகமிருந்தது இது தான். 'விலங்குகள் எதுவும் குடிக்கக்கூடாது' இதில் இப்போது இரண்டு வார்த்தைகள் அதிகமாக இருந்தன. அவற்றை மிருகங்கள் இத்தனை நாளும் மறந்துவிட்டன போலும், விதி சொன்னது என்னவென்றால், 'விலங்குகள் எதுவும் அளவுக்கு மீறிக் குடிக்கக்கூடாது!' பாக்ஸரின் உடைந்த குளம்பு சரியாவதற்குப் பல நாள் பிடித்தது. வெற்றிவிழாக் கொண்டாட்டங்கள் முடிந்த மறு நாளே காற் றாடி யந்திரக் கட்டிட வேலை தொடங்கப்பட்டது. பாக்ஸர் ஒருநாள் கூட ஓய்வு எடுத்துக் கொள்ள மறுத்துப் பழைய மாதி ரியே வேலையைத் தொடர்ந்து செய்து வந்தது. தனக்கு உடலில் நோவு இருப்பதை மற்ற மிருகங் கள் தெரிந்துகொள்ளக்கூடாது என்று பல்லைக் கடித்துக்கொண்டு பாடுபட்டது. க்ளோவரிடம் மட்டும் சாயங்கால வேளையில் "குளம்பு வலிக்கிறது" என்று ரகசியமாகச் சொல்லும், க்ளோவர் பச்சிலைகளைக் கடித்துப் பக்குவப்படுத்தி பாக்ஸரின் காலில் வைத்துக் கட்டும். அதுவும் பெஞ்சமினும், பாக்ஸரைக் குறைவாக வேலை செய்யவும், உடம்பை அதிகமாக அலட்டிக் கொள்ளாதிருக்கவும் தூண்டின. "குதிரைக்கு மூச்சு என்றும் இராது, அது ஒருநாள் போய்விடும்" என்ற பழமொழியை பாக்ஸருக்கு ஞாபகப்படுத்தியது க்ளோவர்.

(நாளை)

## முல்லாவின் அறிவாற்றல்

முல்லா நல்ல அறிவாளி என்றும் எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும் தமது அறிவாற்றலினாலேயே அந்த ஆபத்திலிருந்து தப்பி விடுவார் என்றும் ஊரில் உள்ளவர்களில் பலர் கூறுவது மன்னரின் காதில் விழுந்தது.
அவரது அறிவாற்றலைப் பரிசோதிப்பதற்காக மன்னர் ஒரு நாள் முல்லாவை தமது சபைக்கு வரவழைத்தார்.
முல்லா வந்து வணங்கி நின்றார்.
"முல்லா உனது அறிவைப் பரிசோதனை செய்ய நினைக்கிறேன், நீங்கள் ஏதேனும் ஒன்றைக் கூறும், நீர் சொல்வது உண்மையாக இருந்தால் உமது தலை வெட்டப்படும், நீர் சொல்வது பொய்யாக இருந்தால் நீர் தூக்கில் ஏற்றப்படுவீர் " என்றார் மன்னன்.
முல்லா உண்மை சொன்னாலும் பொய்யை சொன்னாலும் அவர் உயிருக்கு ஆபத்து தயாராக இருக்கிறது. முல்லா நிலமையை எவ்வாறு சமளிக்கபோகிறார் என்று சபையோர் அவரையே கவனித்தனர்.
முல்லா மன்னனை நோக்கி " மன்னர் அவர்களே தாங்கள் என்னை தூக்கில் போடபோகிறீர்கள்" என்று பதற்றம் ஏதுமின்றிக் கூறினார். அதைக் கேட்ட மன்னர் திகைப்படைந்தார்.
முல்லா சொன்னது உண்மையானால் அவருடைய தலை வெட்டப்பட வேண்டும் அவ்வாறு வெட்டப்பட்டால் அவர் கூறியது பொய்யாகிவிடும்.
முல்லா கூறியது பொய் என்று வைத்துக் கொண்டால் முல்லாவைத் தூக்கில் போடவேண்டும். தூக்கில் போட்டால் அவர் கூறியது உண்மை என்று ஆகிவிடும். உண்மை எனக் கருதினால் அவரைத் தூக்கில் போடாமல் கழுத்தை வெட்ட வேண்டும். இப்படி ஒரு குழப்பத்தை தமது அறிவாற்றலால் தோற்றுவித்து முல்லா மன்னனைத் திக்குமுக்காடச் செய்து விட்டார்.
அவரது அறிவாற்றலைக் கண்ட மன்னன் மிகவும் மகிழ்ச்சியடைந்து பொன்னையும் பொருளையும் பரிசாகக் 'கொடுத்து அனுப்பினான்.





# சிறுவர் அமுதம்

### கோமா நிலை



நோயாளி ஒருவர் முழுவதுமாக உணர்விழந்துபோகும் நிலைமையே இது குறிக்கிறது. கடுமையான சிகிச்சை மூலமே அவரை இந்நிலையிலிருந்து மீட்கலாம். இந்த கிரேக்கச் சொல்லின் பொருள் ஆழ்ந்த உறக்கம் என்பதாகும். தலையில் அடிபடுவது, விஷம் தீண்டுதல், அதிகமாக மருந்துகளை உட்கொள்ளுவது அல்லது சில நோய்களால் இது ஏற்படலாம். ஒருவர் கோமாவில் இருக்கிறார் என்றால் அவரது மூளைப் பகுதி ஓரளவு பாதிக்கப்பட் டிருக்கிறது என்று அர்த்தம். காரணத்தைக் கண்டறிந்தே சிகிச்சை யளிக்க வேண்டும். கோமா சில நிமிடங்களும் இருக்கும். பல வாரங்கள் அல்லது மாதங்கள் நீடிக்கலாம். அதிசயமாகச் சிலர் பல வருடங்கள் கோமா நிலையில் இருந்திருக்கிறார்கள்.

### ஓசோன்



கருநீல நிறமுள்ள வாயு. இதனுடைய மூலகத்தில் ஒட்சிசன் அணுக்கள்தான் இருக்கும். ஆனால் அவற்றின் எண்ணிக்கையும், அமைந்திருக்கும் விதமும் ஒட்சிசனுடையதிலிருந்து மாறுபட்டிருக் கும். ஒட்சிசன் மூலகத்தில் இரண்டு அணுக்கள்தான் இருக்கும். இவை முக்கோணமாக அமைந்திருக்கும். காற்று வழியாக மின்சா ரம் பாயும்போது ஓசோன் உண்டாகிறது. மின்சார மோட்டார்களில் ஒரு வாசனை வீசுமே அது ஓசோன் காரணமாகத்தான். வளி மண்டலத்திலுள்ள தீங்கிழைக்கும் சூரிய ஒளிக் கதிர்களாலும் உண்டாகிறது. சூரிய ஒளியிலுள்ள தீங்கிழைக்கும் புற ஊதாக் கதிர்களைக் கிரகித்துக் கொள்கிறது. இல்லாவிட்டால் உலகில் வாழும் உயிர்களுக்குப் பெருந்தீங்கு ஏற்படும்.

## பயணிகளை சுமந்த முதல் ரயில்

1825 ம் ஆண்டு, ஸ்டாக்டான் மற்றும் டார்லிங்டான் என்னும் இங்கிலாந்தின் பொது ரயில்பாதையினிடையே பயன்படுத்தப்பட்ட முதல் புகைவண்டி, ஜார்ஜ் ஸ்டீபன்சன் புகைவண்டியாகும்.

சுடோக்கு எண் 85 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | 1 | 4 | 5 | 8 | 6 | 9 | 3 |
| 6 | 8 | 9 | 1 | 3 | 7 | 5 | 2 | 4 |
| 3 | 4 | 5 | 6 | 2 | 9 | 7 | 8 | 1 |
| 4 | 3 | 7 | 5 | 9 | 2 | 1 | 6 | 8 |
| 1 | 5 | 8 | 7 | 6 | 3 | 9 | 4 | 2 |
| 2 | 9 | 6 | 8 | 4 | 1 | 3 | 5 | 7 |
| 9 | 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 7 | 6 |
| 5 | 6 | 2 | 3 | 7 | 4 | 8 | 1 | 9 |
| 8 | 7 | 4 | 9 | 1 | 6 | 2 | 3 | 5 |

சுடோக்கு எண் 86

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 1 | | | 6 | | 9 | |
| | | | | | | | | |
| 5 | | | | 7 | | | 2 | 1 |
| | | | 7 | | | 8 | | |
| 4 | 6 | | 8 | | 5 | | 7 | 3 |
| | | 8 | | | 3 | | | |
| 1 | 9 | | | 4 | | | | 2 |
| | | | | | | | | |
| | 7 | | 2 | | | 1 | | 4 |

# மைக்கேல் ஜாக்சனின் குரங்கு



பணக்கார வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களைப் பார்த்திருப்போம். ஒரு மனிதனை விட அந்த நாய்க்கு அதிக முக்கியத்துவம் இருக்கும்.வீட்டில் ஷோபாவில் படுத்துக்கொள்ளும்,

காரில் பயணம் செய்யும். இறைச்சி என்ன விலை விற்றாலும் அதற்கென்று தனியாக இறைச்சி சமைத்துக் கொடுப்பார்கள்.பிறந்தாலும் பணக்கார வீட்டில் நாயாக பிறக்க வேண்டும் என்றும் ஏங்குவார்கள் அந்த வீட்டில் வேலை செய்யும் மனிதர்கள்.

இதைப்போல தான் மைக்கேல் ஜாக்சன் வீட்டில் ஒரு குரங்கு வளர்ந்து வந்தது.

இந்த குரங்கை பார்த்த எல்லோருமே மைக்கேல் ஜாக்சன் வீட்டில் குரங்காக பிறக்க வேண்டும் என்று ஏக்கம் கொண்டார்கள்.ஏனென்றால் இன்றைக்கு உலகில் இருக்கும் குரங்குகளிலே மிகவும் பணக்கார குரங்கு இதுதான்.

தனது பிரியத்திற்குரிய "பபிள்ஸ்" என்ற இந்த சிம்பன்சிக்கு மைக்கேல் ஜாக்சன் 20 லட்சம் அமெரிக்க டாலருக்கான சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறார்.

ஒரு காலத்தில் இது மைக்கேலுடன் ரெக்கார்டிங் தியேட்டருக்கு சென்று வரும். அவருடன் உரிமையுடன் விளையாடும். டைனிங் டேபிளில் சமமாக உட்கார்ந்து சாப்பிடும்.மைக்கேலின் படுக்கையறைக்குள் நுழைய யாருக்கும் அனுமதி இல்லை. அங்கேயும் உரிமையோடு நுழைய அனுமதி பெற்ற ஒரே ஜீவன் பபிள்ஸ் தான்.

மைக்கேல் இசை நிகழ்ச்சிக்காக வெளிநாடுகளுக்குப் பறக்கும் போதும் அவரோடு சேர்ந்து பறக்கும் அளவிற்கு பபிள்ஸ் மீது பிரியம் வைத்திருந்தார்.அப்படி இணைந்திருந்த இவர்களுக்குள்ளும் பிரிவு வந்தது.

மைக்கேலுக்கு குழந்தை பிறந்த போது இந்த குறும்பு குரங்கு, குழந்தையை எதுவும் செய்து விடக்கூடாது என்று பயந்து போன மைக்கேல்,

புளோ ரிடாவில் உள்ள ஒரு காப்பகத்திடம் ஒப்படைத்தார். அதை பராமரிக்க மாதந் தோறும் பணம் கொடுத்து பார்த்து வந்தார்.

இறப்புக்கு முன் தனது உயிலில் பபிள்சுக்கும் ஒரு பங்கு எழுதி வைத்திருந்தார்.


# வீதிச் சிறுவர்களின் வங்கி



இன்று உலக பொருளாதார நிபுணர்களையே ஆச்சர்யத்துடன் திரும்பிப்பார்க்க வைத்துள்ளனர் இந்தியாவில் டெல்லியை சேர்ந்த வீடற்ற வீதி சிறுவர்கள். பாடசாலைக்கு கூட செல்ல முடியாது வறுமை காரணமாக சிறுவயதிலேயே தொழிலுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்ட இச் சிறுவர்கள், தமக்குள்ளே "கயானா" என்ற அமைப்பை ஸ்தாபித்து அதனை வங்கியாக விஸ்தரித்துள்ளனர்.

இவ் வங்கியில் முகாமையாளரில் இருந்து, அலுவலகர், வாடிக்கையாளர் என தெரு சிறுவர்களே காணப்படுகிறார்கள்.தாம் அன்றாடம் உழைக்கும் பணத்தை முறைப்படி இவ் வங்கியில் சேர்த்து, அவ் வங்கி மூலம் பல சேவைகளை வழங்குகிறார்கள். இவ் வங்கியை தெற்காசியா முழுவதும் விஸ்தரிப்பதே தமது நோக்கம் என்று இவ் வங்கி முகாமையாளராக பணிபுரியும் சிறுவன் சதீஷ்குமார் தெரிவித்துள்ளார்.

# 2016-ல் டைட்டானிக் 2



2016-ம் ஆண்டு டைட்டானிக் 2 கப்பல் இங்கிலாந்து-நியூயார்க் நகரத்துக்கு இடையே தனது முதல் பயணத்தை துவங்கும் என்று ஆஸ்திரேலிய கோடீஸ்வரர் கிளைவ் பால்மர் தெரிவித்தார். டைட்டானிக் கப்பலைப் போன்று அதிநவீன வசதிகளுடன் ஆடம்பர கப்பல் ஒன்று சீனாவில் கட்டப்பட்டு வருகிறது.

இந்தப் பணியை சீன நிறுவனமான சி.எஸ்.சி. ஜின்லிங் மேற்கொண்டு வருகிறது. இந்தக் கப்பல் 21ம் நூற்றாண்டின் அதிநவீன தொழில்நுட்பத்துடனும் அமைக்கப்படும் என்றும், இன்னும் தொகை மதிப்பீடு செய்யப்படவில்லை என்று கப்பல் உரிமையாளரான கிளைவ் பால்மர் கூறியுள்ளார். மேலும், 2016-ம் ஆண்டு இந்த கப்பல் இங்கிலாந்து-நியூயார்க் நகரத்துக்கு இடையே தனது முதல் பயணத்தை துவங்கும் என்றார்.

கிளைவ் பால்மர் ஆஸ்திரேலியாவின் கோடீஸ்வரர்களில் 5 வது இடத்தில் இருப்பவர். டைட்டானிக் மூழ்கப்பட்டு 100 ஆண்டு நிறைவுக்குப் பிறகு, டைட்டானிக் போன்றே இன்னொரு கப்பல் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# விமானத்தில் பிறந்த குழந்தைக்கு ஜாக்பாட்!




விமானத்தில் பறப்பது மிகவும் வசதி படைத்தவர்களுக்கு சாதாரணம். சாதாரணமானவர்களுக்கு மிகப் பெரிய விஷயம். ஆனால் விமானத்தில் பிறந்த ஒரே காரணத்துக்காக வாழ்நாள் முழுவதும் விமானத்தில் இலவசமாக தன் தாயுடன் எங்கு வேண்டுமானாலும் பறக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்றிருக்கிறது ஒரு குழந்தை. மலேசியாவின் வடக்கிலுள்ள பினாங் தீவிலிருக்கும் 31 வயதாகும் லியூ சியாவ் ஹிசியா என்ற பெண், பிரசவத்துக்காக அவசரமாக போர்னோ தீவுக்கு செல்ல வேண்டும் என்பதால் விமானத்தில் பயணிக்க முடிவு செய்தார்.

ஏர் ஏசியா விமானத்தில் ஏறிய சிறிது நேரத்துக்கெல்லாம் ஹிசியாவுக்கு பிரசவ வலி எடுத்துக்கொண்டது. வலி அதிகமான-தால் வேறு வழியின்றி விமானத்தை தலைநகர் கோலாலம்பூரில் தரையிறக்க முடிவு செய்தனர்.

ஆனால், தரையிறங்கும் முன்பே விமானத்திலிருந்த ஒரு டாக்டர் உதவியுடன் ஹிசியாவுக்கு அழகான ஆண்குழந்தை பிறந் தது. தாயும் சேயும் நலமாக இருப்பதால் நிம்மதியடைந்த ஏர் ஏசியா விமான சேவை, தங்கள் விமானத்தில் பிறந்த குழந்தைக்கு பரிசாக, வாழ்நாள் முழுவதும் தங்களது விமான சேவையின் மூலம் இலவசமாக எங்கு வேண்டுமானாலும் சென்று வர ஒப்புதல் அளித்துள்ளனர்.

குழந்தையுடன் அவனது தாய் ஹிசியாவும் இலவசமாக பயணிக்கலாம் என்றும் ஏர் ஏசியா நிர்வாகம் அறிவித்துள்ளது.

# 107 வயதில் மீண்டும் முளைக்கும் பற்கள்!

"பல்லு போனால் சொல்லு போச்சு" என்பார்கள். குறிப்பிட்ட வயதுக்கு மேல் சொல்லைக் காப்பாற்றினாலும், பல்லைக் காப்பாற்ற முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் இந்த இயற்கை விதியை முறியடித்துள்ளார், சீனாவைச் சேர்ந்த 107 வயது பெண்மணி.

ஜியாவோ ஜென்வா என்ற அந்த மூதாட்டி, சீனா வின் ஹெனான் மாகாணத்தில் வசிக்கிறார். பல ஆண்டுகளுக்கு முன்பே அவரது வாயிலிருந்த பற்கள் முழுவதும் கொட்டி விட்டது. ஜென்வாவின் வாயில் சில ஆண்டுகளுக்கு முன் தொடர்ந்து வலி ஏற்பட்டது. சில நாட்கள் கழித்து ஜென்வாவின் வாயில் ஒவ்வொரு பல்லாக முளைக்கத் தொடங்கியது. குறுகிய இடை வேளையில் பலபற்கள் முளைத்துவிட்டன.

# நள்ளிரவு 12 மணிக்கு 12 திராட்சைகள்

உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் அதீத உற்சாகத்தோடு கொண்டாடப்படுவது, புத்தாண்டு தினம். புத்தாண்டு பிறப்பது பொதுவான விஷயம் என்றாலும், ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாக புதிய ஆண்டை வரவேற்று கொண்டாடுகின்றனர். புத்தாண்டை வித்தியாசமாகவும், ஆச்சரியப்படுத்தும் விதமாகவும் கொண்டாடும் சில நாடுகளைப் பற்றிய தகவல் துளிகள்.

கி.மு. 600ல் பண்டைய எகிப்தில் புத்தாண்டு வரும்போது குழந்தைகளை கூடையில் போட்டு பொது இடத்தில் வைத்து கடவுளை வழிபடுவார்களாம். அந்த வழக்கம் இன்றும் அங்கு ஒருசில இடங்களில் தொடர்கிறது.

கொலம்பியாவில் புத்தாண்டு பிறக்கும் நள்ளிரவில் பொது இடங்களில் மக்கள் ஒன்றாக கூடுகிறார்கள். ஒவ்வொரு குடும்பத்தின் சார்பிலும் மனித பொம்மை கொண்டுவரப்படுகிறது. அந்த பொம்மைக்குள் துன்ப நிகழ்வுகளுக்கு காரணமான பொருட்கள் மற்றும் வெறுக்கும் விஷயங்களை அடைத்து, பழைய ஆடைகள் உடுத்தி தயாராக வைக்கின்றனர். 12 மணிக்கு புத்தாண்டு பிறக்கும்போது அந்த பொம்மைகளை எரித்து விடுகின்றனர். பொம்மை எரியும் போது தங்களைச் சுற்றியுள்ள தீய சக்திகள் எரிந்து சாம்பலாவதாக அவர்கள் நம்புகின்றனர்.

ஸ்பெயின் நாட்டில், புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் சரியாக 12 திராட்சைகளை உண்கின்றனர். இப்படிச் செய்வதால், புத்தாண்டில் வேளாண்மை செழிப்புறும் என்பது நம்பிக்கை.

ஜப்பானில் டிசம்பர் 31ம் தேதி இரவில் மக்கள் தோஷிகோஷி சோபா என்ற நூடுல்ஸ் உணவை உண்ணத் தொடங்குகின்றனர். நள்ளிரவு நெருங்கும்போது புத்த கோயிலில் 108 முறை மணியடிக்கும் ஒலியைக் கேட்டுக்கொண்டே உண்டால், ஆத்மா சுத்தமாகும் என்கின்றனர்.

வெனிசுலா, அர ஜென்டினா, பொலிவியா மற்றும் மெக்ஸிகோ நாடுகளில் புத்தாண்டு பிறக்கும் போது நள்ளிரவில் தங்கள் வீடுகளைச் சுற்றி பெட்டிகளை சுமந்து செல்கின்றனர். இப்படிச் செய்வதால் புத்தாண்டில் செல்வம் பெருகும் என்பது அவர்களது நம்பிக்கை.



# சான்டி புயலால் 2000 கோடி டொலர் சேதம்: இருளில் மூழ்கிய நியூயோர்க்

அமெரிக்காவில் சான்டி புயலால் 2,000 கோடி அமெரிக்க டொலர் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. 62 லட்சம் பேர் மின்சாரம் இன்றித் தவித்து வருகின்றனர்.

அமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் மையம் கொண்டுள்ள சான்டி புயல், கடற்கரையோர நகரங்களை நிலைகுலையச் செய்துள்ளது.

13 அடி உயரத்துக்கு மேல் எழும்பிய அலைகள் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. இதுவரை இல்லாத அளவுக்கு பெய்துள்ள மழையால் நியூயார்க், நியூஜெர்ஸி மாகாணங்கள் வெள்ளக்காடாகியுள்ளன.

மணிக்கு 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசிய காற்றால், மரங்கள் வேரோடு பெயர்ந்து விழுந்துள்ளன.

புயல் காரணமாக நிகழ்ந்த பல்வேறு விபத்துகளில் இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளனர். உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. மின்சாரம் இன்றி 62 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நியூயார்க் உள்பட கிழக்கு அமெரிக்க பகுதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

அணு உலை எச்சரிக்கை: அமெரிக்க அணுசக்தி ஒழுங்காற்று ஆணையம், ஒய்ஸ்டர் கிரீக் அணு மின்நிலையம் தொடர்பாக உஷார் நிலையை அறிவித்துள்ளது.

அங்கு வெளியில் இருந்து வரும் நீரின் அளவு அதிகபட்ச நிலையை எட்டியுள்ளதால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பராமரிப்பு, எரிபொருள் நிரப்புதல் உள்ளிட்ட காரணங்களால் ஏற்கெனவே அந்த அணு உலையின் செயல்பாடு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

புயல் காரணமாக எந்த அணு உலையும் மூடப்படவில்லை, அனைத்து உலைகளும் பாதுகாப்பாக உள்ளன என்று அணு சக்தி ஒழுங்காற்று வாரியம் தெரிவித்துள்ளது.



போக்குவரத்து முடக்கம்: போக்குவரத்து தொடர்ந்து 2ஆவது நாளாக முடங்கியுள்ளது. நியூயார்க்கின் ஜான் எஃப் கென்னடி விமான நிலையம் மூடப்பட்டு, 13 ஆயிரம் விமான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

கனெக்டிகட், டெலாவர், மேரிலேண்ட், மாசாசூசெட்ஸ், நியூயார்க், நியூஜெர்ஸி, பென்சில்வேனியா, ரோத் தீவு பகுதிகளில் அவசரநிலைப் பிரகடனம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஒபாமா ஆலோசனை: பிரசாரத்தை ரத்து செய்துள்ள ஒபாமா, உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜானெட் நெப்போலிடனோ உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், தேர்தல் பற்றி எனக்குக் கவலையில்லை. மக்கள், போக்குவரத்து, பொருளாதாரம் பற்றியே இப்போது கவலையடைகிறேன். மக்களின் உயிர்களைக் காப்பதற்கே முன்னுரிமை அளிக்கப்படும். பொருளாதாரம் விரைவில் சீரடையும் என்றார்.

சேத மதிப்பு: புயல் காரணமாக 2,000 கோடி அமெரிக்க டொலர்கள் வரை பொருளாதார இழப்பு ஏற்பட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நியூயார்க் பங்குச்சந்தை 2 ஆவது நாளாக தொடர்ந்து மூடப்பட்டது. சூழல் அனுமதித்தால் இன்று சந்தை செயல்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீட்புப்படை: 140 ஹெலிகாப்டர்களுடன் 6,700 மீட்புப்படையினர் ஆயத்த நிலையில் இருப்பதாக பென்டகன் ராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

50 லட்சம் லிட்டர் குடிநீர், 30 லட்சம் உணவுப் பொருள்கள், 9 லட்சம் போர்வைகள், 1 லட்சம் கட்டில்கள் தயாராக உள்ளன என்று அவசரக்கால மேலாண்மைப் பிரிவு தெரிவித்துள்ளது.

புகலிடமாக மாறும் குருத்வாரா: அமெரிக்காவில் உள்ள குருத்வாராக்கள், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அவசரகால தங்குமிடமாகப் பயன்படுத்தப்படும் என்று சர்வதேச சீக்கிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பெரும் வளாகங்கள் கொண்ட குருத்வாராக்களில் போதுமான உணவு, குடிநீர் ஆகியவை இருப்பு வைக்கப்பட்டுள்ளன. புயலால் பாதிக்கப்பட்டவர்களை அங்கு தங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்க குருத்வாரா பிரபந்தக் குழு (ஏஜிபிசி) தெரிவித்துள்ளது.

# உலக பார்வை

## உலகப் புகழ்பெற்ற ஸ்காட்லாந்து பொலிசின் தலைமையகம் விற்பனை




கடும் நிதி நெருக்கடியால் பிரிட்டனில் ஸ்காட்லாந்து யார்டு பொலிஸ் தலைமையகம் விற்பனை செய்யப்பட உள்ளது.

பிரிட்டனின் மிகப்பெரிய உலகப் புகழ்பெற்ற ஸ்காட்லாந்து யார்டு பொலிஸ் அமைப்பு, கடந்த 1960ஆம் ஆண்டு முதல் மத்திய லண்டனில் விக்டோரியா நகரில் உள்ள தலைமை அலுவலக கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

தற்போது கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது. பிரிட்டன் அரசும் நிதி ஒதுக்கிட மறுத்து விட்டதால், தற்போது இந்தாண்டு பட்ஜெட் செலவினமாக 500 மில்லியன் உயர்த்துவிட்டது.

இதனால் நிலைமை சமாளிக்க முடியாமல் 2015ஆம் ஆண்டிற்குள் இதனை ஒட்டுமொத்தமாக விற்றுவிட ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.




லண்டனில் பிரைடு ஆப் பிரிட்டன் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் கலந்து கொண் ட இங்கிலாந்து பிரதமர் டேவிட் கேமரூன் விருது வென்ற சிறுமிகளுடன் உற்சாக போஸ் கொடுத்தார்.

# சூடானில் ஈரான் நாட்டின் போர்க்கப்பல்கள்: இஸ்ரேலைத் தாக்க முடிவா?

சூடானில் உள்ள ஆயுத தொழிற்சாலையில் நிகழ்ந்த தீ விபத்திற்கு இஸ்ரேல் தான் காரணம் என அறிவித்தது.

சூடான் நாட்டில் கார்தோம் நகரின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள ஆயுத தொழிற்சாலையில் சமீபத்தில் இரண்டு தடவை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை விநியோகம் செய்வதாக கருதி, இந்த தொழிற்சாலை மீது இஸ்ரேல் குண்டு வீசியதாக சூடான் குற்றம்சாட்டியது. இதற்கு இஸ்ரேல் எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.



இதற்கிடையே சூடானின் நட்பு நாடான ஈரான் 2 போர் கப்பல்களை அனுப்பி உள்ளதாகவும், இவைகள் சூடானின் செங்கடல் பகுதியில் உள்ள துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த பகுதியில் தீவிரவாத செயல், கடற்கொள்ளையர்களை ஒடுக்கவே போர் கப்பல்களை அனுப்பி வைத்திருப்பதாகவும், 2 நாட்டு தளபதிகளும் விரைவில் சந்தித்து பேச இருப்பதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இஸ்ரேலை மிரட்டவே ஈரான்-சூடான் இணைந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறது.


## வானொலி அறிவிப்பாளரை உயிருடன் தீயிட்டு கொளுத்திய மர்ம ஆசாமிகள்

பொலிவியாவில் நேரடி வானொலி நிகழ்ச்சியொன்றை நடத்திக் கொண்டிருந்த நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் மீது மர்ம நபர்கள் தீ வைத்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பொலிவியாவின் யாகுய்பாவின் தென் நகரில் நேரடி வானொலி நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

அப்போது வானொலி நிலையத்திற்குள் புகுந்த நபர்கள், நிகழ்ச்சி அறிவிப்பாளரான பெர் னாண்டோ விடல் மீது பெட்ரோலை ஊற்றி தீ வைத்தனர்.

முகத்திலும், கைகளிலும், நெஞ்சுப் பகுதிகளிலும் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் பெர்னாண்டோவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



பெர்னாண்டோ விடல் கடத்தல் தொடர்பான அறிவிப்பு செய்து கொண்டிருந்த போதே தாக்குதலுக்கு உள்ளானதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

### அமெரிக்காவை தாக்கிய சான்டி புயல்:

# விண்வெளியிலிருந்து பார்த்தார் சுனிதா வில்லியம்ஸ்

அமெரிக்காவைப் புரட்டி போட்ட சான்டி புயலை சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருக்கும் சுனிதா வில்லியம்ஸ் பார்த்ததாகத் தெரிவித்துள்ளார்.

இன்று சுனிதா அனுப்பி உள்ள செய்தியில், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்த போது அமெரிக்காவின் கடற்கரைப் பகுதியில் சுழல் போல் சுற்றியபடி புயல் மையம் கொண்டதையும், அதன் சுழலையும் தாங்கள் பார்த்ததாகவும் தெரிவித்துள்ளார்.



மேலும், தங்கள் குடும்பத்தினர் வசிக்கும் பகுதியில் என்ன நடக்கிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

## காதலனின் விரலை கடித்து துப்பிய காதலி


கழுத்தை நெரிக்க முயன்ற காதலனின் விரலை காதலி கடித்து துப்பிய சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது. அமெரிக்காவின் சிகாகோ நகரை சேர்ந்தவர் ஜெர்ரி ஸ்டீ வன்சன் (வயது 38). இவரது காதலிக்கு வயது 45.

சம்பவத்தன்று ஜெர்ரிக்கும், அவரது காதலிக்கும் இடையே கடும் வாக்குவாதம் மூண்டது.

ஒரு கட்டத்தில் ஜெர்ரி தனது கைத்துப்பாக்கியை எடுத்து காதலியை மிரட்டியுள்ளார். இதனால் பயந்து போன காதலி வீட்டுக்குள் ஓடியுள்ளார்.

ஆனாலும் விடாமல் துரத்திய ஜெர்ரி, தனது காதலியின் கழுத்தை நெரித்து கொல்லப் பார்த்தார். இதையடுத்து ஜெர்ரி யின் கையை பிடித்து விரலைப் பலமாக கடித்தார். இதில் ஒரு விரல் துண்டாகி விட்டது. இதனால் அலறித் துடித்த ஜெர்ரி, துண்டாகிப் போன விரலுடன் மருத்துவமனைக்கு ஓடினார். அங்கு மருத்துவர்கள் விரலை மீண்டும் ஒட்ட வைத்து அறுவைச் சிகிச்சை செய்து சரிப்படுத்தி விட்டனர். இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், ஜெர்ரி மீது வழக்குப் பதிவு செய்து அவரைக் கைது செய்தனர்.

# ராஜிவ் கொலை வழக்கில் முக்கிய சாட்சியான வீடியோ கெசட் மறைக்கப்பட்டதா?



ராஜிவ் காந்தி கொல்லப்பட்ட வழக்கில் மிக முக்கியமான வீடியோ கெசட் சாட்சியம் ஒன்று பதுக்கப் பட்டதாக, இந்த வழக்கில் சிபி ஐயின் தலைமை புலனாய்வு அதி காரியாக செயல்பட்ட கே. ரகோத் தமன் மீண்டும் குற்றம்சாட்டியுள் ளார்.

சென்னையைச் சேர்ந்த ரகோத் தமன் ஏற்கெனவே" ராஜிவ் கொலை வழக்கு- மர்மம் விலகும் நேரம்" என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டி ருக்கிறார். தற்போது "Conspiracy to kill Rajiv Gandhi - From CBI files" என்ற புதிய புத்தகத்தை வெளி யிட்டிருக்கிறார்.

இந்த இரண்டு புத்தகங்களிலும் மிக முக்கியமான விடயமாக ரகோத்தமன் சொல்வது, ஒரு வீடியோ கேசட் மறைக்கப்பட்டு விட்டு என்பதுதான்!

ராஜிவ் கொல்லப்பட்ட மறுநாள் அப்போதைய பிரதமர் சந்திரசேக ருக்கு, தற்போதைய மேற்குவங்க ஆளுநரான எம்.கே. நாராயணன் ஒரு கடிதம் எழுதினார்.

அதில் எங்களிடம் ஒரு முக் கிய கெசட் உள்ளது. அந்த பெண்மணியை" அடையாளம் காண முயற்சிக்கிறோம் என்று கூறியி ருக்கிறார்.

ஆனால் கடைசிவரை ஐ.பி வசம் இருந்த அந்த கெசட் சிபிஐயிட மும் சரி, வேறு எந்த ஒரு விசா ரணை அமைப்பிடமும் ஒப்படைக் கப்படவே இல்லை என்பது தான் ரகோத்தமனின் குற்றச்சாட்டு.

ராஜிவ் கொலை வழக்கில் ஹரிபாபு எடுத்த புகைப்படங்கள் தான் பிரதான ஆதாரமாக இருந்தது.

இந்த நிலையில் சிவராசன், தணு உள்ளிட்டோர் சில மணி நேரம் ஸ்ரீபெரும்புதூர் மைதானத் தில் காத்திருந்து ராஜிவை கொலை செய்திருக்கின்றனர்.

அந்த சில மணி நேரங்களில் அவர்கள் யார் யாருடன் பேசி னர்..? எப்படி ராஜி வுக்கு மாலை யிடும் இடத்துக்கு மெதுமெதுவாக நெருங்கினர் என் பது போன்ற விவரங்கள் ஐபி வசம் இருந்த கேசட்டில் பதிவாகி இருக் கலாம் என்பதுதான் ரகோத்தம னின் சந் தேகம்.

# புடினை முற்றுகையிடுவோம்: கூடங்குளம் எதிர்ப்பாளர்கள்


கூடங்குளம் அணு உலை திட் டத்தை கைவிடாவிட்டால், இந் தியா வரும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை முற்றுகையிடு வோம் என கூடங்குளம் எதிர்ப் பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கூடங்குளம் அணு உலைக் கெதிராக தூத்துக்குடியில் கண் டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள், அணு உலை பிரச் சனையில் மத்திய மாநில அரசு கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

அணு உலைக்கெதிரான இந்த போராட்டத்தில் பங்கேற்பதற்காக தூத்துக்குடி மாவட்டத்தில் பெரிய தாழை முதல் வேம்பார் வரையி லான கடலோர கிராமங்களில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வில்லை.

இதேபோன்று கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டத் திற்கு ஆதரவளிக்கும் வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 48 கிராம மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. இதனால் ஆயிரக் கணக்கான படகுகள் கரையில் நிறுத்தப்பட்டிருந்தன.

மேலும் கூடங்குளத்தில் செயற் படப்போகும் அடுத்த திட்ட நட வடிக்கைக்காக இந்தியா வரும் ரஷ்ய ஜனாதிபதி புடினை முற் றுகையிடுவோமென அவர்கள் கூறி யுள்ளனர்.



# காவிரி விவகாரம்: கர்நாடகம் கட்டுப்பட்டு நடக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு



காவிரி கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடி வுக்கு கர்நாடகம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச் சினையை அரசியலாக்கக் கூடாது என்றும் இரு மாநில அரசு சட் டத்தரனிகளிடம் நீதிபதிகள் அறி வுறுத்தினர்.

காவிரி நதிநீர் பங்கீடு தொடர் பான வழக்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் டி.கே. ஜெயின், ஜக தீஷ் சிங் கேஹர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழகத்தின் சார்பில் ஆஜரான மூத்த சட்டத்தரனி சி. எஸ். வைத்தியநாதன், காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவின்படி 26.10.12 திகதி வரை தமிழகத்துக்கு 116.8 டிஎம்சி நீர் கிடைத்திருக்க வேண்டும்.

வறட்சி காலங்களில் 42 டிஎம் சிக் கும் குறைவான நீர் கிடைத் துள் ளது. தமிழகத்துக்கு தினசரி 9 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிட வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் உத்தரவிட்ட பின்னரும் தமிழகத்துக்கு தினசரி 3 ஆயிரம் கன அடி நீர் மட்டுமே கிடைத் தது.

கடந்த முறை நடைபெற்ற காவிரிக் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், நடுவர் மன்ற உத்தர வுப்படி கர்நாடகம் வழங்க வேண் டிய நிலுவை நீர் குறித்து கூட்டத்தில் விவாதிக்க வேண்டும் என்று தமிழகம் முறையிட்டது. ஆனால் இதை கர்நாடகம் ஏற்க வில்லை.

காவிரிக் கண்காணிப்புக் குழு மீண்டும் இன்று கூடுகிறது. இந்தக் கூட்டத்தில் எடுக்கும் முடிவுக்கு கர்நாடகம் கட்டுப்பட வேண்டும் என்று வைத்தியநாதன் வாதிட்டார்.

கர்நாடகத்தின் சார்பில் ஆஜ ரான மூத்த சட்டத்தரனி நாரிமன், காவிரிக் கண்காணிப்புக் குழு என் பது எவ்வளவு நீர் வழங்க வேண் டும் என்பதை பரிந்துரை செய்யும் அமைப்பு.

காவிரி நதிநீர் ஆணையத்துக் குத்தான் முழு அதிகாரம் உள் ளது. கர்நாடகம் காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை பின் பற்றி தண்ணீரை வழங்கி வரு கிறது.

ஆனால் தமிழகம் நடுவர் மன் றத்தின் இடைக்கால உத்தரவை பின்பற்றி நீர் அளவை மதிப்பிட்டு வருகிறது. இந்த வேறுபாடு களை யப்படவேண்டும் என்று கோரி னார்.

உத்தரவு: இரு தரப்பு வாதங் களைக் கேட்ட நீதிபதிகள், காவி ரிக் கண்காணிப்புக் குழு சுதந் திரமாக அனைத்து முடிவுகளை மேற்கொள்ளலாம்.

# இந்திய செய்திகள்

## இண்டிகோ விமானத்தை கடத்துவதாக புரளியை கிளப்பியவருக்கு ஆயுள் தண்டனை

விமானத்தை கடத்துவதாக புரளியை கிளப்பியவருக்கு ஆயுள் தண்டனை விதித்து டெல்லி மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

கடந்த 2009ம் ஆண்டில் கோவாவிலிருந்து டெல்லிக்கு "இண்டிகோ" நிறுவனத்தின் விமா னம் சென்று கொண்டிருந்தது.

நடு வானில் விமானம் பறந்த போது பயணி ஜித்தேந்தர் குமார் மொக்லா என்பவர் திடீரெ எழுந்து விமானிகள் அறைக்கு சென்றார்.

அவர்களிடம், இந்த விமா னத்தை கடத்த முடிவு செய் துள்ளேன். என்னிடம் துப்பாக் கியும் ஊசிகளும் உள்ளன.

யாராவது எதிர்ப்பு தெரிவித் தால் என்னிடம் உள்ள ஊசியை அவர்கள் மீது குத்துவேன்.

காந்தகார் விமான கடத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளில் நானும் ஒருவன் என மிரட்டல் விடுத்தார்.

இதையடுத்து அந்த விமானம் டெல்லி விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

ஜித்தேந்தர் குமாரை பொலி ஸார் கைது செய்தனர். இது குறித்த விசாரணையில், பயணிக-ளிடம் பீதியை ஏற்படுத்துவதற் காக இவ்வாறு செய்திருப்பதாக வும் அவர் ஒரு நிறுவனத்தின் கணக்காளராக பணியாற்றுவதும் தெரியவந்தது.

இது தொடர்பான வழக்கு டெல்லி மாவட்ட நீதிமன்றத்தில் நடந்து வந்தநிலையில் சில நாட்களுக்கு முன்பு, இந்த வழக்கில் ஜித்தேந் தர் குமார் குற்றவாளி என, தீர்ப் பளிக்கப்பட்டது.

இந்நிலையில் தண்டனை விவ ரத்தை நீதிபதி ஐ.எஸ்.மேத்தா நேற்று அறிவித்தார்.

அவர் கூறியதாவது: கைது செய்யப்பட்டபோது, ஜித்தேந்தர் குமாரிடம் சந்தேகப்படும்படியான பொருட்கள் எதுவும் இல்லை என கூறப்பட்டுள்ளது.

இருந்தாலும் எந்த காரணமு மின்றி விமானிகள் அறைக்குள் நுழைந்து விமானிகளுக்கும், சக பயணிகளுக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது தவறான செயல் ஆகும்.

160 பேர் பயணம் செய்த அந்த விமானத்தில் பயணிகளுக்கு பீதியை ஏற்படுத்தும் வகையிலும் அவர்க ளின் உயிர்களுக்கு அச்சுறுத் தலை ஏற்படுத்தும் வகையிலும் ஜித்தேந்தர் குமாரின் நடவடிக்கை அமைந்திருந்தது.

விமானத்தில் பயணிக்கும் ஒவ் வொருவரும், சர்வதேச விமான போக்குவரத்து விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். இதை மீறி நடந்து கொள்வது தண்டனைக் குரியது. எனவே இந்த வழக்கில், ஜித் தேந்தர் குமார் மொக்லா வுக்கு ஆயுள் தண்டனை விதிக் கப்படு கிறது என நீதிபதி தன் தீர்ப்பில் தெரிவித்தார்.



திருச்சி மாநகராட்சி சார்பில், ஸ்ரீரங்கம் மேலூர் சாலையில் நர்ஸிங் கல்லூரி மாணவிகள், டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், தண்ணீர் பாத்திரங்களில் அபேட் மருந்து ஊற்றினர்.

## மரபணு பிரச்சினை: 25 விரல்களுடன் வலம் வரும் 4 வயது சிறுவன்



இயற்கைக்கும் அதிகமான கை, கால்களில் விரல்களை கொண்ட சிறுவன் மத்திய பிரதேசம் போபா லில் வளர்ந்து வருகிறான்.

அர்பன் சக்சேனா என்ற பெயரு டைய இந்த சிறுவன் பிறக்கும் போதே இயற்கைக்கும் அதிகமான முறையில் அவனுடைய கை, கால் களில் விரல்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்ததாக அவனது அம்மா தருணா தெரிவிக்கிறார்.

இச்சிறுவனின் இடது கையில் 6 விரல்கள் இருக்கிறது. அதிலும் பெரு விரல்கள் இரண்டு இரண் டாக இரு கைகளிலும் ஒட்டியி ருக்கிறது.

இது தவிர வலது கையில் குட் டியாக ஒரு விரலும் இருக்கிறது. இதே போல் அவனுடைய இரு கால்களிலும் 6 விரல்கள் கணக் கில் 12 விரல்கள் இருக்கின்றன.

இது குறித்து அச்சிறுவன், தன்னை மற்றவர்கள் புகைப்படம் எடுக்கும் போது சந்தோசமாக இருக்கிறது என்றும் ஆனால் போட்டுக்கூட நடக்க முடியாத சூழ்நிலை நிலவுவதாக அச்சிறு வன் தெரிவித்தான்.

# தனபாலன் ஞாபகார்த்த சவால் கிண்ண போட்டியில் மட்டு. லக்கி விளையாட்டுக்கழகம் வெற்றி



மட்டக்களப்பின் கிரிக்கெட் போர் என வர்ணிக்கப்படும் 6ஆவது தனபாலன் ஞாபகார்த்த சவால் கிண்ண கிரிக்கெட் போட்டியில் மட்டக்களப்பு லக்கி விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

கடந்த 6 வருடங்களாக சிவானந்த விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்படும் இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழங்கள் விளையாடுகின்றன. கடந்த வாரம் ஆரம்பமான இப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 18 கடின பந்து விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின.

சிவானந்த விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதிப்போட்டியில் காத்தான்குடி விளையாட்டுக்கழகமும் மட்டக்களப்பு லக்கி விளையாட்டுக்கழகமும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற லக்கி விளையாட்டுக்கழகம், காத்தான்குடி விளையாட்டுக்கழகத்தை துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தது.

இந்நிலையில் காத்தாகுடி விளையாட்டுக்கழகம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 122 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு லக்கி விளையாட்டுக் கழகம் 6.5 ஓவரில் 2 விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்களை பெற்றவேளையில் மழை குறுக்கிட்டதன் காரணமாக போட்டி இடை நிறுத்தப்பட்டு சர்வதேச விதியான "லக்வைஸ் லூவிஸ்" தீர்வு முறையில் லக்கி விளையாட்டுக் கழம் 08 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரைப் பிற்போடுமாறு இலங்கை கோரிக்கை

இலங்கைக்கு அடுத்தாண்டு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான டெஸ்ட் தொடரை 2014ஆம் ஆண்டு அல்லது அதற்குப் பின்பாக பிற்போடுமாறு தென்னாபரிக்கக் கிரிக்கெட் சபையிடம் இலங்கைக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை, இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் பங்குகொள்ளும் முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டி, ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடர் ஆகியவற்றிற்கு இடம் வழங்குமாகவே தென்னாபிரிக்க டெஸ்ட் தொடரைப் பிற்போட இலங்கைக் கிரிக்கெட் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஏற்கனவே மேற்கிந்தியத் தீவுகளுக்கு 2 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 2 டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டிகளுக்காகச் செல்லவிருந்த நிலையில் அத்தொடரை இல்லாது செய்து இலங்கை, இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் பங்குகொள்ளும் முத்தரப்புத் தொடராக இலங்கைக் கிரிக்கெட் சபை மாற்றியிருந்தது.

அதன் பின்னர் ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் இடம்பெறவிருந்த டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 3 டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடரிலிருந்து டெஸ்ட் போட்டிகளையே இலங்கைக் கிரிக்கெட் சபை பிற்போட விரும்பியுள்ளது.

ஓகஸ்ட் மாதத் தொடக்கத்தில் ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடர் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கான இடைவெளியை வழங்கும் முகமாகவே இந்தக் கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கைக் கிரிக்கெட் சபையின் கோரிக்கை தொடர்பாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்த தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை, அது தொடர்பாக முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவித்தது.

ஏற்கனவே இந்திய அணி இலங்கையில் 3 டெஸ்ட் போட்டிகளில் இவ்வாண்டு பங்குபற்றவிருந்த நிலையில் அத்தொடரை 5 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், ஒரு டுவெண்டி டுவெண்டி போட்டியாகவும், அதற்கு முன்னர் இங்கிலாந்திற்கெதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 2 போட்டிகளாகவும் மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பகலிரவு டெஸ்ட் போட்டிக்கு அவுஸ்திரேலியா வரவேற்பு




ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளைப் போல, டெஸ்ட் போட்டிகளையும் பகலிரவில் நடத்த, சர்வதேச கிரிக்கெட் வாரியம் (ஐ.சி.சி) அனுமதி கொடுத்தது.

போட்டியை நடத்துவது, பந்துகளின் நிறத்தை முடிவு செய்வது போன்றவற்றில் அந்தந்த நாடுகளின் விருப்பத்தை பொறுத்து முடிவு செய்யலாம் என்று ஐ.சி.சி தெரிவித்தது.

இதற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் வரவேற்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அவுஸ்திரேலிய வாரியத்தலைவர் ஜேம்ஸ் சந்தர்லாந்து கூறுகையில், ஐ.சி.சி.,யின் முடிவு வரவேற்கத்தக்கது.

வாரத்தின் இறுதி நாட்களில் பகலிரவு டெஸ்ட் போட்டியை நடத்துவதால், பள்ளி மற்றும் அலுவலகங்கள் செல்வோர் இதைக் காண்பதற்காக வர வாய்ப்புள்ளது. தவிர தொலைக்காட்சி வாயிலாக பார்ப்பதற்கு நேரமும் கிடைக்கும்.

கடந்த ஜனவரியில் இந்தியா, அவுஸ்திரேலியா மோதிய பெர்த் டெஸ்ட் போட்டியை அதிகமானோர் தொலைக்காட்சியில் பார்த்து ரசித்தனர்.

அப்போது போட்டி மாலை நேரம் வரை நீடித்தது தான் காரணம் என்றும் இதனால், மற்ற நாடுகளுடன் பேசி எதிர்காலத்தில் பகலிரவு டெஸ்ட் போட்டியை நடத்த முடிவு செய்வோம் எனவும் கூறியுள்ளார்.

# இங்கிலாந்து தொடரில் சச்சின் சதம் அடிப்பார்: ஜான் ரைட்



இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரில் சச்சின், மீண்டும் "பார்முக்கு" திரும்புவார் என்று இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜான் ரைட் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் சாதித்த சச்சின், சமீபகாலமாக துடுப்பாட்டத்தில் திணறுகிறார். ஐந்தாவது ஐ.பி.எல் தொடருக்குப் பின்பு இதுவரை ஒரு அரைசதம் கூட அடிக்கவில்லை.

கடைசியாக இவர் விளையாடிய 9 இன்னிங்சில், 6 முறை போல்டானது பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளது. இங்கிலாந்து தொடருக்கு முன்பு இழந்த "பார்மை" மீட்க, ரஞ்சி கிண்ண போட்டியில், மூன்று ஆண்டுகளுக்குப் பின்பு களமிறங்குகிறார்.


இது குறித்து இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜான் ரைட் கூறுகையில், சச்சினைப் பொறுத்தவரையில் இடது கை வேகப்பந்து வீச்சாளர்களிடம், அதிகமாக போல்டாகி வருகிறார்.

இதை நான் தவறாக சொல்லவில்லை. ஏனெனில், 2002, மேற்கிந்திய தீவுகள் தொடரின் போது, இடது கை வேகப்பந்து வீச்சாளர் பெட்ரோ காலின்சிடம் அடுத்தடுத்து வீழ்ந்தார்.

அதேநேரம், இது கவலைப்படும் அளவுக்கு பெரிய விடயமல்ல. ஏனெனில், தொழில்நுட்ப தவறுகள் ஏற்படுவது சகஜம் தான். பல்வேறு காலங்களில் இப்படிப்பட்ட நிலைகளில் இருந்து மீண்டு வந்துள்ளார் சச்சின். இம்முறையும் மீள்வதற்கு வாய்ப்புள்ளது. இதற்கான திறமை அவருக்கு உள்ளது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலிய தொடரில் அடைந்த தோல்வி, சச்சினை மிகவும் பாதித்தி[illegible] என்றும் எதிர்வரும் இங்க[illegible] அவுஸ்திரேலிய தொட[illegible] சதம் அல்லது இரட்டை சதம் [illegible]தால், அவருக்கு மிகவும் தூண்[illegible]கோலாக அமையும் எனவும் கூறியுள்ளார்.

# பயிற்சி ஆட்டத்தில் ஸ்டிவன் பின் காயம்




இந்திய ஏ அணி, இங்கிலாந்து பதினொருவர் அணிகளுக்கு இடையிலான பயிற்சி ஆட்டம் மும்பையில் நடைபெற்று வருகிறது.

இந்தியா ஏ அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் விளையாடிய இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஸ்டிவன் பின், 4 ஓவர் மட்டுமே வீசிய நிலையில் காயம் காரணமாக மைதானத்தில் இருந்து வெளியேறினார்.

தசை நார் கிழிந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டதால், உடனடியாக அவருக்கு ஸ்கான் பரிசோதனை செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர் மீண்டும் மைதானத்துக்கு திரும்பாமல் ஓய்வெடுத்தார்.

# இந்திய தொடரை இங்கிலாந்து வெல்வது எளிது: கவாஸ்கர்



இங்கிலாந்துக்கெதிராக 4 டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ள இந்திய அணி துடுப்பாட்டத்தில் மிகவும் பலவீனமாக உள்ளது என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், நாம் இங்கிலாந்து சென்றபோது இங்கிலாந்தும், அவுஸ்திரேலியாவும் பலவீனமாகவே இருந்தது.

ஆனால் இரண்டு தொடர்களிலும் இந்தியா முதல் டெஸ்டிலிருந்தே சொதப்பத் தொடங்கியது. முதல் டெஸ்டின் ஒரு சில கணங்கள் தவிர மற்ற 3 டெஸ்ட்களிலும் இந்தியா தோல்வியடைந்து 0-4 என்ற கணக்கில் சரணடைந்தது.

தற்போதும் கடந்த ஆண்டிலிருந்தது போலவே பலவீனமான நிலையிலேயே இந்திய அணி உள்ளது. தொடக்க வீரர்களும் பார்மில் இல்லாத போது இந்திய துடுப்பாட்டம் மிகவும் பலவீனமாக உள்ளது.

எனவே இங்கிலாந்து இந்தத் தொடரை வெல்ல அதிக வாய்ப்பிருக்கிறது. இந்திய அணியில் சுழற்பந்து வீச்சுதான் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. அ்வின் விரைவில் கற்றுக்கொள்பவர், ஓஜாவும் சிறப்பாக வீசுபவர்தான்.

அலிஸ்டைர் குக் 2006ல் துடுப்பெடுத்தாடியது போல் சீரான முறையில் ஆடத் தொடங்கினால் இந்தியாவை வீழ்த்துவதில் இங்கிலாந்துக்கு சிரமம் இருக்காது எனவும் கூறியுள்ளார்.

இந்தியாவில் 1985ம் ஆண்டு டேவிட் கோவர் தலைமையில் இங்கிலாந்து டெஸ்ட் தொடரை வென்றது. அதன் பின்பு வெற்றிபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்துக்கெதிரான ஆட்டத்தில் வலுவான நிலையில் இந்திய அணி: யுவராஜ், திவாரி அரைசதம்



இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் பயிற்சி போட்டியில் யுவராஜ் சிங், திவாரி அரைசதம் அடித்து கைகொடுக்க, இந்திய அணி வலுவான நிலையில் உள்ளது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி நான்கு டெஸ்ட், இரண்டு டி20, ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதற்கு முன் இந்திய ஏ அணிக்கெதிராக மூன்று பயிற்சி போட்டியில் இங்கிலாந்து அணி பங்கேற்கிறது. முதல் பயிற்சி போட்டி மும்பையில் இன்று தொடங்கியது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய ஏ அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. இந்திய ஏ அணிக்கு முரளி விஜய், அபினவ் முகுந்த் ஜோடி தொடக்கம் தந்தது.

முரளி விஜய் 7 ஓட்டங்கள் எடுத்தபோது ரன்அவுட் ஆனார். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய முகுந்த் 16 பவுண்டரிகளுடன் அரைசதம் கடந்து 73 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

பின்பு களமிறங்கி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய யுவராஜ் சிங் அரைசதம் கடந்து 59 ஓட்டங்களும், அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா, சாகா தலா 20 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைசதம் கடந்த மனோஜ் திவாரி 12 பவுண்டரிகளுடன் 93 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய இர்பான் பதான் 46 ஓட்டங்கள் எடுத்து எல்பிடபிள்யூ ஆனார்.

இன்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய ஏ அணி 9 விக்கெட் இழப்பிற்கு 369 ஓட்டங்கள் எடுத்துள்ளது. வினய்குமார் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இங்கிலாந்து சார்பில் டிம் பிரெஸ்னன், கிரேம் ஸ்வான் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இப்பத்திரிகை இன்.'.போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 01.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது